[illegible]

[illegible] 10 [illegible]

Feb 1937

SC

[illegible] N27 SM

N37.10.6

186958

REGD NO. M. 3460.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



THE R... FEB 1937

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு க௦. | பலவான்குடி தாது—தை | திங்கள் ௬.

| எண். | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | சிவநேசனுக்கு வாழ்த்து | ... | 129 |
| 2. | திருத்தம் | ... | ,, |
| 3. | மதிப்புரை மஞ்சரி | ... | 130 |
| 4. | ஒரு பெரியார் பிரிவு | .... | 132 |
| 5. | தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தடை | .... | 133 |
| 6. | சமணக் கூட்டத்திற் சூலைநோய் | .... | 141 |
| 7. | கந்தபுராண காப்புச்செய்யுளின் உரைவிளக்கமறுப்பு | | 146 |
| 8. | ஒரு வினா? | ... | 147 |
| 9. | விபரீத விளக்க மறுப்பு | ... | ,, |
| 10. | எலிமயிர்க் கம்பலம் அல்லது பனிப்பகைப்படாம் | | 151 |
| 11. | சுலோக பஞ்சக விஷயம் | | (77--80) |

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:—** குமார விநாயகர் திருக்கோயிலில் மாசி ௧௨-வ வளர்பிறைச் சதுர்த்தசியில் நடராஜாபிடேகமும் ௨௮-வ ராத்திரி இவ்வாலயத்திலும் சிவாலயத்திலும் சிவராத்திரி பூஜையும் நடைபெறும்.

தை ௫-வ மேலைப்பிள்ளையார்கூடத்தில் வாலிப சங்கத்தாபனவிழா ஆலவாக்கோட்டை திருவாளர், பி. நா. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள் தலைமையில் கூடி தேசீயக் கொடியேற்றம், கடவுள் வாழ்த்து விரிவுரையாதியன நடைபெற்று நன்கு நிறைவேறியது.

மாசி ௫-வ செங்கமலநாயகி திருவுலா நேமத்தான்பட்டி செ. சரு. சித. குடும்பத்தினரால் செய்யப்பெறும்.

**திருவோத்தூர்:—** பரிதிபுரத்திருநாவுக்கரசு மடாலயத்து ஸ்ரீ பாநுகவி மாணவர் கழக எட்டாவது ஆண்டுவிழா, சென்னை, தமிழ்ப்புலவர், திருவாளர், கா. ரா. கோவிந்தராஜ முதலியாரவர்கள் தலைமையில் புலவர் பெருமக்களின் விரிவுரைகளுடன் தை ௧௭, ௧௮-வகளில் இனிது நடைபெற்றது.

**காரைக்கால்:—** சைவ சித்தாந்த வித்தியாச்சிரமத்தின் மூன்றாவதாண்டு நிறைவுவிழா காரைக்காலம்மையார் சந்நிதிமுன் மகாநாட்டுப்பந்தரில் திருக்கைலாய பரம்பரை தருமபுரவாதீனத்தைச்சேர்ந்த திருவையாறு கட்டளை உயர்திரு, அருணந்தி தம்பிரான் சுவாமிகளின் தலைமையில் பேரறிஞர்களின் சீரிய விரிவுரைகளுடன் தை ௧௭-வ தொடங்கி இன்றுவரை நடைபெறுகின்றது.

**செட்டிநாடு பமோனியர் பாங்கு அளவையுள்ளது:—** இதன் கிளையொன்று காரைக்குடி கல்லுக்கட்டி, வடகரை 111 எண்ணுள்ள கட்டிடத்தில் தை ௧௮-வ தொடங்கி நடைபெறுகிறது.

**தேர்யக் கொடியேற்று விழாவும் பிரசாரமும்:—** ஆத்தன்குடியில் மார்கழி ௨௮-வ நடைபெற்றன. உ. சிறுவயலில் தை ௧௨-வயாகிய இன்று நடைபெறும்.

**எளிதாயிருக்கிறது:—** ஒவ்வொரைக் கொடிப் போடுவதென்றால் வெகு அரிதாகக் கூறப்படுவதுண்டு. அதற்கு மாறாக இப்போது மிகவெளிதாயிருக்கிறது.

**சிதம்பரம்:—** மார்கழித் தெரிசனம் மாண்புடன் நடைபெற்றது. ஈசான்ய மடத்தில் மார்கழி ௪௦-வ முதல் நான்கு தினங்களிலும் பிற்பகல் ௩மணி தொடங்கி காஞ்சிபுரம் சைவ புராணிகர் திரு, அ. க. பொன்னுசாமி முதலியாரவர்களால் நான்கு பிரசங்கங்களும், பிரமஸ்ரீ S. N. சீனிவாசையரவர்களின் சங்கீத வினிகையும், கொல்லபுரம் திரு, சம்பந்தப் பிள்ளையவர்களால் தேவாரப்பாடலும், நடைபெற்றன. திருவிழாத் தொடங்கி பத்துநாள் மகேஸ்வர பூஜை செய்து அன்பர் அடியவர்கட்கு அமுதருத்தப்பெற்றது. ஆடூர்கிராமம் திருவாளர், க. வி. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் ஐந்து கல அரிசியும் இருபது ரூபாவும் உதவினர். தேர்த்திருவிழாவன்று மகேஸ்வர பூஜைக்காக கனம் செட்டிநாட்டு ராஜா அவர்கள் ரூபா இருபது உதவுகின்றார்கள். இம்மடத்தின் பரிபாலகர் திரு, பழநிச்சாமிசாமியாவர்.

**"ஹிந்தி" மொழியில் தேறிய தனவணிகர்:—** சமீபத்தில் சென்னை தக்ஷிண பாரத ஹிந்தி பிரசாரசபையினரால் நடத்தப்பட்ட ஹிந்தி பரீட்சைகளில் பிராதமிக்(முதலாவது) பரீட்சைக்கு கோனாபட்டு திருவாளர், ராம. சேதுராமன் செட்டியார் ஆஜராகி காரைக்குடி பரீட்சை நிலையத்தில் தேறியவருள் அதிக மார்க்குகள்பெற்றுமுதன்மையாகத்தேர்ச்சியுற்றார். இவரதுமுயற்சியின்திறன்கண்டு பலசெட்டியார்கள் ஹிந்தி கற்றுக்கொள்ள முன்வந்துள்ளனர். இதன் அத்தாட்சிப் பத்திரம் (சர்டிபிகேட்) காரைக்குடியில் திருவாளர், ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

FEB 1937

உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு ௰ | தாது—தை 1937—பிப்ரவரி | திங்கள் ௯. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவ ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## சிவநேசனுக்கு வாழ்த்து.

(கும்பகோணம், அசுகூர், பாலசுப்பிரமணியப் பசுந்தமிழ்க் கழகத்தினர், திரு, S. A. முத்தையத் தேவரவர்கள்.)

1. கண்டோர் விரும்புதலால் காணபல வாகுதலால்
விண்டோரை மேவா திருத்தலால்—தண்டமிழால்
போற்றிப் புகழுதலால் பொற்பார் சிவநேசன்
மாற்றினுயர் பொன்னையொக்கு மால்.

2. சக்கவொளி தாங்குதலால் தாரணியோ ரேத்துதலால்
மிக்க கலையோடு மேவுதலால்—நக்கபிரான்
றன்னை யகலாத் தகைமையால் அதித்தன்
றன்னையொக்கும் இத்தாளுந் தான்.

---

## திருத்தம்.

சிவநேசன் ஆண்டு ௰, திங்கள் ௫-ல் "சிவநேசன்வாழ்த்துமாலை" ஐந்தாவது அகவற்பா 120-ம் பக்கத்தில் "மாந்தர் மனவிரு டமிக்கு மாண்டன்" என்றிருப்பதை "மாந்தர் மனவிரு டமிக்கு மாண்புடன்" என்றும், "பத்தாம் ஆண்டு பரவுதற் கேய்தது" என்றிருப்பதை "பத்தாம் ஆண்டு பரவுதற் கேய்த்தது" என்றும் கொள்க.

---

## மதிப்புரை மஞ்சரி.

மஹாவைத்திநாதையர்:— இப்பெரியார் தஞ்சை ஜில்லா திருத்தென்குடித்திட்டை என்னும் சிவக்ஷேத்திரத்திற்கு அணித்தாயுள்ள வையைச்சேரிக் கிராமத்தில் சங்கீதத்தின் தவப்பயனாக இற்றைக்குத்தொண்ணூற்றுமூன்றாண்டுகட்குமுன் வந்துதித்தவர்; நாற்பத்தொன்பதாண்டுவரை இவ்வுலகில் நிலவினவர்; தமது பத்தாவதாண்டிலேயே சங்கீதத்தில் மிகத் தேர்ந்த வித்துவானாகி பனிரண்டாவது ஆண்டாகிய இளம்பிராயத்திலேயே மகாவைத்திய நாதையர் என்னும் பட்டம் பெற்றவர். சிவவேடப் பொலிவுழுது திகழும் இவரது திருவுருவ நிழலோவியத்தை முகப்பிலமைத்து இவரது சரித்திரத்தை இனிதே வரைந்து அச்சியற்றிப் புத்தகமாக்கி சென்னை, திருவல்லிக்கேணி, திருவேட்டீசுரன் பேட்டை, மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்டுள்ளார்கள். மகாவைத்தியநாதையரவர்கள், சங்கீதத்திறன், பொறை, அடக்கம், சைவப்பற்று, வசீகரசக்தியாதிய நன்னயங்களுடையராய், சிறந்த அறிவாளிகளாகப் பிறங்கிய மேன்மை மிக்க பெரியார்கள்; இயற் புலவர்கள்; இசைப் புலவர்கள் ஆதிய தக்கார் பலரால் பாராட்டப்பெற்று விளங்கினமையும், அவர்களுடன்பிரியாதிருந்த பிரியசகோதரர் இராமசாமி ஐயரவர்களின்பேரன்பும்பிறவும் படிக்கப்படிக்க இன்பைத்தருவனவாகும். இவ்வாலாற்றுரைபாலகுமார விருத்தராகிய பலரும் படித்து அன்பு மீதூரும் பான்மையது. கிரௌன் 1-க்கு 16-கிளேஸ் 88-பக்கம் இப்புத்தகம் விலை அணா ஆறு. ஆக்கியோரிடம்பெறலாம்.

திருப்புகழமிர்தம்:— இத் திருப்பெயர் தாங்கிய மாத வெளியீடொன்று உயர்திரு, கிருபானந்தவாரி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. பேரறிஞர் கிருபானந்தவாரி அவர்கள் திருப்புகழிடத்தும் முருகனிடத்தும் பெரும் பக்தி வாய்ந்தவர். நமது பார்வைக்கு வந்துள்ள சஞ்சிகையில், "அருக்கு மங்கையர்" என்னும் திருப்புகழ்ப்பாடலுக்குப்பதவுரையும், பொழிப்புரையும் விரிவுரையும், பாடலில் வருங் கதைவரலாறும், கருத்துரையும் செவ்விய தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. முருகன் பெருமை, அறத்தின் பெருமை முதலிய அரும்பெரும் விஷயங்களும் காணப்படுகின்றன. இவ்வுயரிய திங்கள் வெளியீட்டை சிவகுகநேசர்களெல்லாரும் அவசியம் வாசித்து இன்புறவேண்டும். இதன் வருட சந்தா ரூபாய் ஒன்றே. விலாசம்: திருப்புகழமிர்தம் ஆபீஸ், 2/7 ஐயா முதலிதெரு சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை. இவ்வாசிரியரின் பிரசங்க வன்மை அறிஞர்பலராலும்கொண்டாடப்பெறுகிறது. இவர்களின் வெளியீட்டையும் பிரசங்கத்தையும் ஆதரிப்பது சைவ உலகிற்குப் பெரிய நன்மையாகும்.



திருத்துருத்திப்புராணம்:— தஞ்சைஜில்லா மாயூரத்திற் கணித்தாயுள்ள குற்றாலமென்னும் திருத்துருத்தித்தலபுராணம் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடி ஏட்டுப்பிரதியாயிருந்ததைக் குற்றாலம் போர்டு உயர்தரக் கலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் திருவாளர், ப. சிங்காரவேற்பிள்ளையவர்கள் உரைநடை, குறிப்புரை முதலியவற்றுடன் இத்தலத்திற்குரிய தேவார திருவாசகாதிகளும் சேர்த்து நானூறு பக்கங்கொண்ட புத்தகமாகக் கெட்டிக் கட்டிடமாக்கி வெளியிட்டுள்ளார்கள். நாற்பது படலங்களையும் ஆயிரத்தறுநூற்றிருபத்தேழு செய்யுட்களையும் கொண்டு சொன்னயம் பொருணயம் செறிந்து விளங்கும் இதன் விலை ரூபா ஒன்றரை. பதிப்பாசிரியருக்கு எழுதிப்பெறலாம்.

திருவெம்பாவை வரலாறு:- ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவெம்பாவைக்கு தஞ்சை ஜில்லா குற்றாலம் போர்டு உயர்தரக் கலாசாலைத்தமிழ்ப்புலவர் திருவாளர், ப. சிங்காரவேற் பிள்ளையவர்கள் எழுதிய வரலாறு, திருவாசகச் சிறப்பு, திருவெம்பாவை உரை நடையுடன் அச்சியற்றி டிம்மி 1-க்கு 8 கிளேஸ் 36 பக்கங்களுடன் புத்தகவடிவமாக வெளிவந்துளது. திருவாசக ஆராய்ச்சியை அச்சிற்பதிப்பதன் நிமித்தம் இதற்கு இரண்டணா விலை யேற்படுத்தியுள்ளார்கள். ஆக்கியோரிடம் பெறலாம். இவ்வரலாறு முதலியன ஏற்கனவே நம்சிவநேசனில் வெளிவந்துளது. சிறந்தஉரைநடையென அறிஞர்பலர் பாராட்டுகின்றனர்.

கிரகண விளக்கம்:— யாழ்ப்பாணம் மட்டுவில், தில்லைவாசப்பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றி அச்சிற்பதிப்பித்து வெளியிட்ட புத்தகம். கிரகணம் ஏற்படும் விதத்தைச் சித்திரங்களுடன் விளக்கி அதன் பலாபலன்களும் குறித்து அயல் நாட்டு ஆராய்ச்சி முறைகளையுந்தழுவி 12 பக்கங்களுடன் வெளியிடப்பெற்றது. இதன்விலை அணாஒன்று. இதனை ஆக்கியோரிடம் பெறலாம்.

சைவப் பஞ்சாங்க விரத நிர்ணய ஆபாச விளக்கம்:— தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தாரின் சைவப் பஞ்சாங்க விரத நிர்ணயங்களைக் கண்டித்து யாழ்ப்பாணம் மட்டுவில் தில்லைவாசி பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதிப் பதித்து வெளியிடப்பெற்றது. அவர்கட்கு எழுதிப்பெறலாம். பலபஞ்சாங்கங்களும் ஒரேபடித்தாகவும் சைவப்பஞ்சாங்கம் மாத்திரம் வேறு படித்தாகவும் விரதங்களை நிர்ணயிப்பதால் அகில பாரத சோதிடமகா சபை கூட்டித் தம் பட்சத்தைநிலைநாட்ட முன்வரவேண்டுவது சைவப்பஞ்சாங்க வெளியீட்டாரின் கடமையே.

விரதாதி நிர்ணய விபரீதம்:— இது திருநெல்வேலி சைவ சித்தாந்த சங்க வெளியீட்டை மறுத்து சுருதி யுக்தி அனுபவங்களுடன் யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிட பரிபாலினி ஆசிரியர் பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதையரவர்கள் எழுதிப் பதித்து வெளியிட்ட புத்தகம் ஆக்கியோர்க்கு எழுதி விலையின்றிப்பெறலாம்.

186958

சித்தன்:— இரண்டாண்டுகளாகப் பழநியில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கும் இப்பத்திரிகையின் மூன்றாவது மாலையின் முதல்மணி நம் பார்வைக்குக் கிடைத்தது. இம்மூன்றாவதாண்டு முதல் பெரிய வடிவில் வெளிவருகிறது. விநோதக் கதைகள், பெரியோரின் வரலாறுகள், வைத்தியக் குறிப்புகள், சினிமாப் பகுதிகள், உலகச்செய்திகள் முதலியன அடங்கப்பெற்றிருக்கிறது. இதன் ஆண்டு வரி அணாஎட்டு. தனிப்பிரதி முக்காலணா. மானேஜர், சித்தன், பழநி என்னும் விலாசத்திற்கெழுதிக்கொள்ளலாம்.

கலியுகம்:— இப்பத்திரிகையின் மலர் 3, இதழ் 3, 1937 ஜனவரி மாதப் பிரதி வரப்பெற்றோம். தெய்வங்கொள்கையுடன் வைத்தியக் குறிப்புகள், விகடத்துணுக்குகள், சினிமாச்செய்திகள், உலகசமாச்சாரங்கள் முதலியன காணப்படுகின்றன. தனிப்பிரதி காலணா. இதன் ஆண்டு வரி ஆறணா. விலாசம்: மானேஜர், கலியுகம் ஆபீஸ் 1/10 ஸ்ட்ரிங்கர் தெரு, சென்னைக்கு எழுதிப்பெறலாம்.

## ஒரு பெரியார் பிரிவு.

திருவாவடுதுறை ஆதீனசைவப்பிரசாரகரும், தேவகோட்டை சிவாகம சங்க சித்தாந்த போதகாசிரியரும், தசகாரிய விளக்கம் சர்வ ஞானோத்தர முதலிய நூலாசிரியரும், சிவஞான சித்தியார், சிவஞானபோதம் ஆகியவைகளின் விரிவுரையாசிரியரும், தேவிகாலோத்தர ஆகமம் தமிழ் மூலத்திற்கு சித்தாந்த ரத்ன விருத்தியுரை ஆசிரியருமாகிய தூத்துக்குடி சைவத்திருவாளர், பொ. முத்தைய பிள்ளையவர்கள் சைவத்தில் அழுத்தமுள்ளவர்களெல்லாம் முதன்மையாளராவர்; கொண்டுவிலை கொடுக்கல் வாங்கல் தொழில்களைத்திறமையுடன் நடத்தியும்,சைவ நூல்களைச்செவ்வனே யாராய்ந்தும், சைவத்தொண்டேபுரிந்தும், சதாசாரமேற்கொண்டொழுகியும், தொகைவகைப்படுத்தி ஆங்கிலப் புலமை மிக்காரும் வியந்து தம்வசமாகும்படி அரியபெரிய விரிவுரைகளாற்றியும், தமிழுலகமும் சைவவுலகமும் தக்காரெனக்கொண்டாடும் பெருமை பெற்றவர்கள்; பொன்னம்பலவனை எந்நேரமும்போற்றும் புண்ணியசீலர். பொன்னம்பலனார்பெற்றபுதல்வரும்,பிரசங்கரத்னமாகியபொன்னம்பலனார்முதலானாரைப் புத்திரராகப்பெற்றவரும், பொன்னம்பலத்திலேநாட்டமுற்றவருமாகிய இப்பெரியார் இவ்வாண்டுமார்கழித் திருவாதிரைநாளன்று தெரிசிக்க முத்திதருஞ்சிதாகாச க்ஷேத்திரத்தில் பொன்னம்பலவனைத் தெரிசித்து, தேவகோட்டை வந்து யாதொரு வேதனையின்றி சிவத்யானத்துடன் தமது அறுபத்தொன்பானாண்டாகிய தாது மார்கழி கசுஉ மாலை எழுமணிக்கு சிவகதியுற்றனர். இவர்களின்பிரிவுக்கு சைவவுலகமே வருந்துகிறது. இவரதுஆன்மா பேரின்பப் பெருவாழ்வுற இறைவர் பேரருள் புரிவாராக.



# தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை.

(சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்த சைவப் பிரசாரகர் சென்னை, திரு, மா. நீலகண்ட சித்தாந்தியார் அவர்கள்.)

(10-ம் ஆண்டு 112-ம் பக்கத்தொடர்ச்சி)

பிணத்தைத் தொட்டால் தீட்டு, (தொத்து வியாதி அணுகாமலிருக்கும்பொருட்டு.) சுடுகாடுசென்றால் தீட்டு, (பிணப்புகைமுகத்திற்படாமலும் பிணம்வேகும் நாற்றம்மூக்கிலேறி நோயணுகாமலுமிருக்கும் பொருட்டு.) நம்முடைய கோயில்களிலோ பிணத்தைவைக்கலாகாது, பிணம்போனாலே கதவையடைத்துவிடுவர். நங்கோயில்களுள் ஸ்நானஞ்செய்யாமலும், வண்ணான்சலவையுடுத்திக்கொண்டும், சட்டையிட்டுக்கொண்டுஞ்செல்லலாகாது. அதுவுங்குளிர்காலமாகிய மார்கழிமாதத்தில் அதிகாலையில் உஷத்காலத்தில் ஸ்நானஞ்செய்து கடவுட்பூசைசெய்யவேண்டும். அப்பொழுதுதான்கொழுப்புச் சற்று நீங்கும். நம் ஸ்திரீகள் தீட்டாய்விட்டால் நாலாம்நாள் ஐந்தாம் நாள்தான் ஸ்நானஞ் செய்துவிட்டுப் புருஷன் முகத்தையோ சூரியனையோ தரிசித்தல்வேண்டும். வேறு முகத்தில் விழித்தாற் கற்புத்தன்மை கெடும். பிறக்கும் பிள்ளையும் வேறுஉருவத்தையும் குணத்தையுமடையும். ஸ்நானஞ் செய்த பிறகு பால் நெய் முதலிய சாத்துவிகப் பொருள்களை யுண்டாற் பிறக்கும் பிள்ளைக்குஞ் சத்துவகுணமேவிடும். விதை யொன்று போட்டாற் சுரை யொன்று முளைக்குமோ? நாலாம் நாள் உள்ளே வரலாமென்றது சூதகம் நீங்கிவிடும் அல்லது தணிந்துவிடும் என்பதன் பொருட்டே. சூதகமிருக்கும்போதே மூன்றுநாளைக்குள் குளித்துவிட்டு உட்சென்றாற் புருஷனுக்குக் கெடுமதி கண்ணுக்குத் தோன்றாமற் கட்டாயப்படுத்திப் புணர்ந்து ஜன்னிபிறக்கிறது. ஒருவேளை தப்பித்துக்கொண்டாலும் சீக்கிரமாக ஆணுக்கோ பெண்ணுக்கோ பல ரோகங்களுண்டாகிப் பல்லுஞ் சீக்கிரம் விழுந்துபோகிறது. பிறக்கும் பிள்ளையும் அங்கஹீனமாய்ப் பிறக்கும்.

பகலென்றும் இரவென்றும் இல்லாமற் கண்டபோதுநாய்கள்போல் இழுத்துத்திரிந்தால்வைத்தியசாலைகள்பெருகக்கேட்பானேன்!ஐரோப்பியர்களுக்கு அதி சீக்கிரத்திற் பல்நோயேற்படுகிறதும் பல் விழுகிறதும் பல் கட்டுகிறதும் வைத்தியசாலைகள் எங்கேபார்த்தாலும் ஏற்படுகிறதும் பெரும்பாலும் முற்கூறிய காரணத்தினாலேயாம். பெருந்தீனியும், நெடுந்துயிலும், பெருங்குடியு மேற்கொண்டாற் பகலென்று பார்க்குமோ இரவென்று பார்க்குமோ இரண்டாம் நாளென்றடங்குமோ! இதனாற்றான் விதவா

ஸ்திரீகள் ஒருவேளை சுத்த போஜனஞ்செய்து பாயிலுறங்காமல் தரையில் படுத்துப் பகவானையே நினைந்து பகவானுடைய புகழையே கேட்டுப் பகவத் கைங்கிரியத்திலேயே ஈடுபடவேண்டுமென்று வைத்தது. அதுவன்றி மூன்று வேளை நான்குவேளை முட்டையை விழுங்கி மித மிஞ்சிய தீனி தின்றால் மூன்று புருஷனையுந் தேடும் நான்கு புருஷனையுந்தேடும். விதவா விவாகத்தையும் விரும்பும். அதோடு விதவை சினிமா, கூத்து முதலாயின பார்த்தாற் காமம் பெருகக்கேட்பானேன்! மொட்டையடித்துக் கொள்ளச் சொன்னது அழகு நீங்கினால் ஆண்கள் சட்டை பண்ணார்கள்; தொந்தரவு செயயார்களென்பதன் பொருட்டேயாம். சூதகமற்ற பிறகு கருத்தரிக்குங் காலமாகிய ஐந்தாநாள்முதல் பதினாறுநாள் வரையில் உள்ள பன்னிரண்டுநாட்களுள் இரட்டித்தநாட்களிற்புணர்ந்தால் ஆண் குழந்தையும், ஒற்றித்த நாட்களிற் புணர்ந்தாற்பெண்குழந்தையும் பெறலாமென்பது நிச்சயம். இந்துக்களின் பூர்வீக சாஸ்திர சூட்சுமங்களை யறியாமலே உலகம் முன்னேற்றமடையாமற் பின்னிறங்கி நாகரீகமற்றுப்போகிறது. ஐயோ என்ன விபரீதம்! மேலும் ஆண்களும் பெண்களுந் தீண்டாமல் ஒதுங்கிப் போகவேண்டுமென்பது காமக்கொதிப்புண்டாகாமலிருக்கும் பொருட்டேயாம். அதுவன்றி அரசாங்ககலாசாலை (Presidency college) முதலிய விடங்களில் வயதுற்ற ஆண்களும் பெண்களுங் கூடிப் படித்தாற் 'காமம் பெருகுமோ கல்வி பெருகுமோ' விரிக்கிற் பெருகும். பின்னாற் பார்ப்போம்.

மேலும் நங்கோயிலுக்குப் போகும்போது செருப்பு முதலியனகூடாதென்பது வழியிலுள்ள எச்சில் மல முதலியவற்றோடு உட்புகாமலிருக்கும் பொருட்டேயாம். கோயிற் குளத்திற் குளித்துட் புக வேண்டுமென்றது வழியிற் படிந்த புழுதி நீங்கும் பொருட்டும், வேர்வை நாற்றம் நீங்கும் பொருட்டும், மண்டை குளிர்ச்சி யடைந்து சத்வகுண மேலிட்டுப் பரம்பொருளை ஒருமை மனதுடன் தியானிக்கும் பொருட்டுமேயாம். ஆகவே குளத்திலும் கோயிலிலும் மாடு தின்னும் மற்றமதஸ்தர்கள் நுழையக்கூடாதென்றதுபோல் புலையரும் நுழையக்கூடாதென்று விதி முன்னேயே ஏராளமாய்க் காட்டப்பட்டது. அப்படிச் செய்வதால் வேற்று மதத்தினராகிவிடுகின்றனரென்றால் அப்படி அவர்களுக்குள் உறுதி வாய்ந்தவர்கள் செய்யார்கள். இந்து மதத்தை விட்டு இதர மதத்தினுழைந்தால் மோட்சத்திற்கு வெகுதூரம் போய்விடுவர். விரிக்கிற் பெருகும். அப்படிப் போய் விட்டாலும் நமக்கோர் பாதகமில்லை. அவர்களுக்கே கெடுதி. இந்துக்கள் ஜனத்தொகை குறைந்து பலங் குறுகிவிடுகிறதே யென்றாற் சிறிய தீவிலுள்ள ஆங்கிலேயர் பெருந்தொகையினரை யடக்கி யாள்வதும் காந்தி



ஒருவரே ஏமாந்த பலரைத் தன்வசப்படுத்துவதுங் கண்டமைக. ஆனால் அறுபான்மும்மை நாயன்மார் உற்சவம் கருடோற்சவம் முதலியவற்றில் ஜனங்கள் குளித்துவிட்டுப் பயபக்தியோடு நடந்து செல்லாமல் டிராம், பஸ் முதலியவற்றிலேறித் தோட்டி முதற் றொண்டைமான் வரையிற் றீண்டி அசுசியடைவது அநாகரீகமன்றோ? நாட்டுப்புறங்களில் டிராம் முதலியதுகள் இல்லாததால் பத்து மைலானாலும் உற்சவ முதலியவற்றிற்கு நடந்தே செல்வர். மதமுமடங்கும் பக்தியும் பெருகும். கண்டதை வழியில் வாங்கித் தின்றுகொண்டு செல்லலுங் கூடாது. அதுவும் வயிற்றுவலி முதலியவற்றைப் பெருக்குமாதலின்.

நிற்க, இனிக் கீதையை மறுபடியுஞ் சற்றுப்பின்பற்றுவாம்:—

“ஞானபண்டிதர்கள் கல்வியும்வணக்கமுமுள்ள பிராஹ்மணனிடத்திலும் பசுவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் ச்வபாகேச (சண்டாள)னிடத்திலும் ஒரேவிதமாகப் பிரகாசிக்கும் பிரம்மத்தைப் பார்க்கின்றனர்” என்பதே. 'ச்வபச' என்னும் பதம் சண்டாளனுடைய பரியாயப் பெயரென்பதை முன்னேயே காட்டப்பட்ட அமர நிகண்டின் வாக்கியத்தாலறிக. ஆனால் கீதைக்கு முன்னூலாய்ச் சிவபெருமானால் இராமனுக்குபதேசிக்கப்பட்ட சிவ கீதையிற் சண்டாளன் என்கிற பதத்தைப் பலவிடத்தில் நேரே காணலாம். விரிவஞ்சி விடுத்தாம். இனி சுலோகத்தில் வித்யா விநய சம்பன்னம்,' 'பிராமணம்' 'காம்' 'ஹஸ்திநம்', 'ஶ்வாநம்' 'ச்வபாகம்' என வடமொழி இரண்டாம் வேற்றுமையைப் பிரயோகிக்காது, பலர் எதிர் காலத்தில் அநர்த்தம் பண்ணுவார்களென்ற தீர்க்க தரிசனத்தையுடைய கண்ணன் 'சம்பன்னே', 'ப்ராஹ்மணே', 'ஹஸ்திநி', 'ஶுநி', 'ச்வபாகேச', என ஏழாம் வேற்றுமையிற் பிரயோகித்தமையாற் சித்தாந்த சைவத்திற்குச் சற்றும் முரணுறாது முற்றும் அரணுற்றமை காண்க. என்னை? அவர் இரண்டாம் வேற்றுமையிற் பிரயோகித்திருந்தால் பிராஹ்மணனையும் பசுவையும் யானையையும் நாயையும் சண்டாளனையும் பண்டிதர்கள் சமமாகப் பார்க்கிறார்கள் என்ற பொருள் நிலையுறும். இல்லையே யென் செய்யலாம்! மேலும் இவ்வருமையான சுலோகத்திற் சாத்துவித குணமுற்ற கல்வியையும், வணக்கமுடைய பிராஹ்மணனையும், பசுவையும், இராசத குணமுற்ற யானையையும், தாமதகுணமுற்றநாயையும், சண்டாளனையும் பாகுபாடுசெய்து பிரயோகித்தமையாற் பெரிதும் பேதம் பெறப்பட்டமை காண்க. உயர்வு சிறப்பும்மைகளாலும் பேதங் காண்க. அவர் கருத்துப் பிரகாரம் பிராஹ்மணன், பசு, யானை, நாய், சண்டாளன் இவர்களைச் சமானமாகக் கொண்டாற் பிராஹ்மணனும் சண்டாளனுஞ் சமம். பசுவும் பன்றியுஞ் சமம். நாயும் நாயையடிப்போனுஞ் சமம்.

எல்லாம் ஒன்றே என்றன்றோ கொள்ளவேண்டிவரும். நாயையும் நாயையடிப்போனையும் ஒன்றென்று கூறினால் நாயடிப்போன் நாயையடிக்காமல் எல்லாம் ஒன்று என்றவனையே யடித்துவிடுவான். ஆகவே இவ்வாறு கூறி மரபழித்தலழகோ! "இல்லை எனக்கு ஏழாம் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை யென்ற வியாகரண பாகுபாடு வேண்டாம். உம்மைகளும் வேண்டாம் நான் பண்டிதனல்ல. எல்லாஞ் சமமாகவே கொள்வேன். இலக்கணம் அதாவது இலட்சண பேதம் வேண்டியதில்லை" என்று அவர் பிடிவாதஞ்செய்தால் அது அவருக்கே அவலட்சணமாக முடியும். அப்போது சுயராஜ்யமே பகற்கனவாய்முடியும்.

பேதம் வேண்டாதவர் சுயராஜ்யக் கூச்சலிடுவானேன்? வெள்ளையரை மெதுவாக ஓட்டிவிட்டு நாமேநாடாள்வோம் என்று விரைதலேன்? இராமனுண்டாலென்ன இலக்குமணனுண்டாலென்ன என்றன்றோ சகோதர பாவம் பூண்போர் மௌனஞ் சாதித்தல் வேண்டும்? பேதமற்றவர் வீண் கலகஞ் செய்வானேன்? பேச்சளவிற் சகோதர பாவமும் செய்கையிற் சத்துருபாவமுமா? நன்றாயிருக்கிறது! இதனால் உலக சகோதரத்துவம் (Universal Brotherhood) என்பதும் ஊரை ஏமாற்றிப் பிடுங்கித் தின்பதேயாம். அறிவாளிகள் மயங்காரெண்க. இன்னோர் விஷயம்:- எல்லாம் ஒன்று என்றால் 'மகாத்மா' என்கிற பெயரும் எடுபட்டுப்போம். குடியரசிற் பறையனென்றும் பார்ப்பானென்றும் பேதம் பார்க்கக்கூடாதென்றால் ஒருவருக்கு மாத்திரம் மகாத்மா என்கிற வீண் பட்டமேன்? அவர் மாத்திரம் மஹாத்மாவானால் மற்றவரெல்லாம் அற்ப ஆத்மாக்கள் என்ற தூஷணைக்கன்றோ இடமாகிறது. பேதமில்லையென்றால் எல்லோரும் மகாத்மாக்களே. ஒருவர் மாத்திரம் அந்தப்பேரைச் சுமக்கக்கூடாது. இறக்கிவிடவேண்டும். இதனால் அவர் விட்டகடா அவரையே திருப்பிக்கொண்டது காண்க. ஆகவேசுயராஜ்யமும்மகாத்மாப் பட்டமும் வேண்டுமா? இன்றேற் பராராஜ்யமும் அற்பாத்மா என்கிற பட்டமும் வேண்டுமா? எது ஆசை கூறுமின்! எதுவும் விருப்பமில்லையென்றாற் பேசாதிருமின்! வீண்பிரசாரம் எற்றிற்கு? மேலும், சுயராஜ்யங் கிடைத்தாற் கூட காந்தியே சர்வாதிகாரியாயிருப்பர். பிராமணர் முதலாயினாரை "மலம் வாருங்கள், தோற்பதனிடுங்கள், வீதிக் குப்பையைக் கூட்டுங்கள், சுடுகாட்டுக் காவலிருங்கள், பிணந்தூக்குங்கள், பிணத்தைச் சுடுங்கள், வெட்டியான் வேலையைச் செய்யுங்கள், வேற்றுமை வேண்டாம்" என்று எந்த அரசாங்கமும் இதுகாறுஞ் செய்யத் துணியாத செய்கையை இவர் செய்துதன்புறுத்தத் துணிவர். ஆட்சேபமில்லை. அப்போது, இப்போதே இவர் வாலைப் பின்பற்றும் பலகுட்டிச் சர்வாதிகாரிகள் மாகா



ணர்தோறும் ஏற்பட்டு அவர்களின் கீழ் அளவற்ற குஞ்சதிகாரிகளும் நிருவப்பட்டு ஜனங்களைப் படாதபாடுபடுத்துவர் கண்டீர்! இதுதானா அஹிம்சா தருமம்! அந்த உத்தியோகத்திற் காசைபடுவோர்தான் "உலக விடுதலை உலகவிடுதலை" என்று கூச்சலிட்டு வெளிவேஷம் பகல்வேஷம் போட்டாடுகின்றதை வேடிக்கை பாருங்களன்பர்களே! அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றுவோர் உள்ளதைக் கூறும் எம்மீதுங் கோபங்கொள்ளலாகாது. அப்போது அஹிம்சாதர்மம் பறந்துவிடும். மலம்வாரல் முதலிய பாவத்தொழில்களைக் கூசாமற் செய்ய இஷ்டப்பட்டுச் சீவிக்கப் பார்க்கும் ஜாதியினரை அத்தொழிலிற் பிரயோகித்தல் இம்சையா, அன்றிச் சற்றேனும் அத்தொழில்களைச் செய்ய ஓர்போது மனமொப்பாத பிராமணர் முதலாயினாரை அத்தொழிலைச் செய்ய கட்டாயப்படுத்தல் ஹிம்சையா? யாருங்கட்டாயப்படுத்தவில்லையே யென்றாற் சுயராஜ்யங் கையிலில்லை வந்துவிட்டாற் கட்டாயமேற்பட்டுவிடும். இல்லாவிடிற் சுட்டே விடுவார்கள். இப்போதே சாஸ்திரம் வேண்டாம் என்போர் அப்போது வேத முதலிய சர்வசாஸ்திரங்களையும் எரித்துவிட்டு முன்னொருவர் கூறியவாறே கோயில்களையெல்லாம் ருஷ்யாவிற் செய்ததுபோல் வெடிமருந்து (Dynamite) வைத்துச் சரிமட்டமாக்கிவிடப் பின்னிடார் கண்டீர். மேலும் வைதீகர்களெல்லாம் வாயிலடித்துக்கொண்டு மாண்டுபோகும்படி அநேக கொடுமைகளையுஞ் செய்வர். இப்போது கோயில் ஃகாயில் என்பதெல்லாம் பெரும் பகட்டேயாம்.

எந்த அக்கிரமஞ் செய்தாவது சுயராஜ்யமடையத் தீர்மானித்துவிட்டார் கண்டீர்! சுயராஜ்யம் வந்துவிட்டாலோ குதிகுதி யென்போரெல்லாங் கூடக்குதியார் என்னை? காஷ்மீர் ஜம்மு ஆள்வார் முதலியவிடங்களில் இப்போதே சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கலகஞ் செய்யும் மகம்மதியர்களின் சுபாவம் சாதுவான இந்துக்களை இலேசாய் விடாது கண்டீர் (33) கோடியில் யாரோ (30) பேர் அலகபாத்திற்கூடி சமாதானம் சமாதானம் என்ற மேல்வேஷம் போட்டால் மூலை முடுக்குகளில் இந்தியாமுழுதும்நிறைந்திருக்கும் மற்றைய மகம்மதியர்களின் சுபாவத்தை மாற்ற முடியுமோ? இப்போதே இணங்கிவராத அவர்கள் அப்போது சும்மாயிருப்பரா? சுபாவம் போகுமா? அவர்களுக்குத் துணையாக ஆப்கானிஸ்தானம் இருக்கிறது. அன்றியும் அரேபியாவும் பாரசீகமும் துருக்கியுமிருக்கிறது ஜாக்கிரதை. அதோடு ருஷ்யாவினுடைய உதவியும் பெறக்கூடும். சந்து விட்டாற் போதுமென்றிருக்கின்றது ருஷ்யாவும். ஜப்பானோ இங்கிலீஷ்காரரோடிவிட்டால் ஏமாந்த இந்துக்களை இராஜாளி புறாவைக் கவ்வுகிறதுபோற் கவ்விப் பரதகண்டத்தை விழுங்கி ஏப்பம்விட ஏங்கு

கிறது. பிறகு இந்துக்களெல்லாம் இஞ்சி தின்று இளநாகத்தைக் கையிற் பற்றி மிளகாயுங் கடித்துவிட்டுத் தேளுங் கொட்டித் தீயின்மேற் பாயுங் குரங்கைப்போல் விழிக்கவேண்டியதே. சந்தேகமில்லை. இல்லாவிடில் அலிசகோதரர்கள் கூற்று முன்னொருகால், "இந்தியா முழுவதையும் மகம்மதியர்களாக்கவேண்டும்; காந்தியை முதல்மகம்மதியனாக்கவேண்டும்; அப்போதுதான் சுயராஜ்யத்திற் பேதமிராது", என்று உள்ளிருந்தது பொங்கித் ததும்பி வெளிக் கிளம்பிப் பூரணப் பிரவாகமாய்ப் பத்திரிகை தோறும்பரவியதைப்பகற்கனவைப்போல் மறந்துவிட்டீர்களோ? இவர்கள் இவ்வாறு கூறுவது புதிதன்று. அது அவர்கட்குச் சுபாவமென்பதை அரங்கசீப், ஐதர், திப்பு, கஜினி முகம்மத், கோரி, நாதர்ஷா முதலியவர்களுடைய சரித்திரத்திலிருந்துந் தெரிந்துகொள்ளலாம். இப்போதும் பஞ்சாப், வங்காளம், சென்னை முதலான விடங்களில் ஏமார்ந்தவர்களை மகம்மதியர்களாக்குவதுங் கண்கூடே. எல்லோருக்கும் பொதுவான வீதியிற் போகும் சுவாமியின் ஊர்வலம் கலியாணஊர்வலம் முதலியவற்றில் மசூதியண்டை அக்கிரமமாய் "ஜாரே பான்சோத் மேளத்தை நிறுத்து நம்பிள்கி ஊதரான் இல்லே" என்று கட்டாயப் படுத்திக் கலகஞ் செய்வதும், திருவல்லிக்கேணி ஜாம்பஜார் பூக்கடைச்சமீபத்திலுள்ள மாரியம்மன் கோவில் உற்சவம் நடக்குங்காலத்து லப்பைத் தெருவிலுள்ளார் பெருங் கலகம் விளைத்தலின் போலீஸ் பந்தோபஸ்து வருஷந்தோறும் ஏற்படுவதும் வடநாட்டிற் பக்ரீத்காலத்திற் பசுக்களை மகம்மதியர்கள் வேணுமென்றே கொலை செய்வதாற் கணக்கற்ற இந்துக்கள் மனம் பொறுக்காமற் சண்டேசுர நாயனார்போற் பரிந்துபேசி உயிர் மாள்வதையும் யாரால் மறைக்கமுடியும்? முடியாது முடியாது.

ஈஸ்வரன்கோயிலையிடிப்பதும் இலிங்கத்தைத் தகர்ப்பதும் விக்கிரகங்களைக்கொண்டுமாடிக்குப் படிகளமைப்பதும் ஈஸ்வரன்கோயில், பெருமாள் கோயில்களினருகேவேண்டுமென்றே அவர்கள் இடுகாடு(சுடுகாடு) ஏற்படுத்துவதும், காஞ்சி, திருவேட்டீஸ்வரன்பேட்டை முதலியவிடங்களில் ஈஸ்வரன் கோயில் மண்டபத்தை மசூதியாக்கிக்கொள்வதும், மயிலைக் கபாலீசுவரர் குளத்தைத் தாங்கள், அல்லா பண்டிகை காலத்திறங்கி அசுசிப்படுத்துவதும் அதை அரசாங்கத்தார் தடுக்காதிருப்பதுவும் உலகமறியாதோ? இன்னும், சுயராஜ்யங் கிடைத்துவிட்டால் மாத்திரம் மேல் கீழ் என்பது எவ்வாறு ஒழிந்துவிடும். ஒருபோதும் ஒழியாது உயர்வு தாழ்வில்லாவிடிற் கடவுளுக்கே வேலையில்லாது கையோய்ந்துபோம்; கன்மமென்பதே கிடையாது. கன்ம மொழியவே நானாவித சிருஷ்டியு மொழிந்துவிடும். உலகமேயில்லை. சுயராஜ்யத்திற்காகப்பாடுபடவேண்டியதேயில்லை. மேலும்



சுயராஜ்யங் கிடைத்துவிடிற் போலீசுமிராதா? நீதிஸ்தலங்களிராதா? மூடர்களென்றும் நீதிபதிகளென்றும் பேதமிராதா? எல்லோருக்கும் பேதமின்றிச் சம்பளங்கிடைக்குமா? எல்லோரும் சர்வாதிகாரிளாய் விடுவாரா? வியபிசாரஞ் செய்பவன் திருடுகிறவன் மோசஞ் செய்கிறவன் அடிப்பவன் குத்துபவன் கொலை செய்பவன் இவர்களுக்குத் தண்டனையேயிராதா? "அவர்களைத் தண்டிப்பது ஹிம்சையாகும், ஆகையால் அப்பா நீ திருடாதே; ஓடிப்போ; அப்பா நீ அவன் பெண்டாட்டியைக் கைபிடிக்காதே ஓடிப்போ; அப்பா நீ அவனை இனிக்கொலை செய்யாதே ஓடிப்போ" என்று மன்னித்து ஓட்டிவிடுவாரா? அற்றேல் இராணுவதிகாரம் நமக்கு வேண்டுமென வாதாடுவதும் அடாது. ஆகா இதென்ன அஹிம்சா தருமமோ? யாரை ஏமாற்றுவதோ! இதனாற்றான் உலகத்தை அவர் வஞ்சிக்கிறார் என முன் கூறினோம். "இப்போது நம்மிடம் துப்பாக்கி, குண்டு (Arms and Ammunition) இல்லாததால் அந்தப்பாட்டைப்படுகிறேன். காரியம் முடிந்து விட்டாற் பழையபடி எல்லாம் ஏற்பட்டுவிடும்" என்றால் அதுவும் பெருமோசமே. இவர் கருத்துப்படி சத்தியாக்கிரஹமாகாது. ஆகவே சுயராஜ்யத்திலும் எல்லாப் பேதமும் ஏற்பட்டேதீரும். அவனவன் கன்மத்திற் கேற்றவாறே இன்பமுந் துன்பமும் ஏற்படும். தனவந்தன் ஏழை என்ற பேதம் இருந்தேதீரும் என்பது ஒருதலை. ஏனெனின் எல்லோருஞ் சர்வாதிகாரியாயிருக்க முடியாது. ஆனால் இங்கிலாந்து ஜப்பான் முதலிய இடங்களிற்றோட்டி யெனப் பிரத்தியேகமாக ஓர் ஜாதியில்லை யென்றால் அந்தத்தத் தொழிலுக்காகச் சிலர் ஏற்பட்டிருப்பதால் அவர்களை யெல்லாம் சக்கரவர்த்தி ஸ்தானத்திலமர்த்த முடியாது. ஜாதியென்று வேறேவேண்டுமோ? கவர்னர் மனைவி முதலாயினரோடு ஸோல்ஜர்கள் கைகோத்து (Dance) ஆடுதல் வழக்கமின்றே, Scavenger, master, servant, mean fellow, idiots fools, Commons, Lords Destiny fate, Rowdy முதலிய ஆங்கிலவார்த்தைகள் அவர்களகராதியிற் காணவேண்டிய ஆவசியகமேயின்று. ஆனால் நம்புனிதபாத கண்டத்திலோ எல்லாங் கடவுளாஞ்ஞைப்படியே ஏற்பட்ட பேதமென முன்னமேயே காட்டப்பட்ட வேதாகமஸ்மிருதியாதி வாக்கியங்களாலுணர்ந்து கொள்வாராக. பேதமின்றி உலகம் நடைபெறாதெனத் தெற்றென உணர்க.

காந்தி, கீதை ஒன்றே பின்பற்றுவேன் மற்றைய சாஸ்திரங்கள் வேண்டாமென்றார். ஆனால் இதுகாறுங் காட்டிய கீதாவசனங்களே இவர் கொள்கையை முற்றும் முறியடிக்கின்றன. சாஸ்திரங்கள் வேண்டாமென்றாரே அதையுஞ் சிறிது பார்த்துவிடுவோம். வேதங்களுடைய பிரஸ்தாபம், 2-45, 4-32, 6-44, 7-8, 8-11, 8-28, 9-17, 9-20, 21,

10-22ல் நன்கு காணப்படுகிறது. ப்ரம்ம சூத்திர பிரஸ்தாபம் 13-5,லும் வேதாந்தம் அதாவது உபநிஷத் பிரஸ்தாபம் 15-15லும் விசதமாய் வெளிப்போந்திருக்கிறது. இனி,

“எவன் சாஸ்திரோக்தமான விதிகளைத் தூரத்தள்ளித் தன்னிஷ்டப்படி நடக்கிறானோ அவன் தத்துவஞ் ஞானத்தை அடைகிறதில்லை; இந்த உலகத்திலுஞ் சுகமடைகிறதில்லை; உத்தமமான மோக்ஷத்தையும் அடைகிறதில்லை.” என 16-23 ஆஞ்சுலோகம் அறைகிறது. (இதனாற்றான் நாசஞ் சம்பவிக்கும் என்று இடையிடையே காட்டினோம்).

“ஆகையால் உனக்குச் செய்யத் தகுந்தது இன்னது செய்யத்தகாதது இன்னது என்பதை நிச்சயிக்கச் சாஸ்திரமே பிரமாணமாயிருக்கிறது. சாஸ்திர விதிகளிற் பிரமாணமாகச் சொல்லப்பட்டதைத் தெரிந்துகொண்டு இவ்வுலகில் உனது கர்மத்தைச் செய்யத் தகுந்தவனாய் இருக்கிறாய்” என்று 16-24ஞ் சுலோகம் கூறிற்று. ஆகையாற் சாஸ்திரம் வேண்டாமென்றதும் அடிபட்டுப்போயிற்று.

“இவற்றை நீ, ஸத்குருபாதமடைந்து சிஷ்யனாகிச் சாஷ்டாங்க நமஸ்காரத்தினாலும் அடக்கமாய்க் கேட்பதினாலுங் கற்றுக்கொள்: ஞானிகளும் தத்துவதரிசிகளும் உனக்குப் போதிப்பார்கள்” என்றது 4-34ஞ்சுலோகம். காத்தற் கடவுளாகிய கண்ணனிடம் நேரே கேட்கும் பாக்கியமும் வேறெவரும் பாக்கமுடியாத விசுவ ரூபதெரிசனமும் பெற்ற அர்ச்சுனனையே அவ்வாறு அவரே கட்டளையிடுகின்றனரென்றாற் குருவை யடுக்காமலே வாயில் வந்தவாறு பேசுபவர்களை என்னென்றெடுத்துரைப்பது!

“மூடத்தனத்தால் தன் தேகத்தை வறட்சியான உபவாசத்தால் ஹிம்சித்துக்கொண்டும் இதரர்களை நாசஞ் செய்யக் கருதியும் எந்தத் தவஞ் செய்யபடுகின்றதோ அதைத் தாமஸம் என்று சொல்லுவார்கள்” என்றது 17-19ம் சுலோகம்.

“அசுராம்சப் பிறவி யெடுத்தவர்களுக்குச் சிரௌதஸ்மார்த்த கர்மப்ரவிர்த்தி இன்னதென்றும், கர்ம நிவ்ருத்தி யின்னதென்றுந் தெரியாது. அதாவது எதை அனுஷ்டிக்கவேண்டுமோ எதை அனுஷ்டிக்கக் கூடாதோ அதையறியார்கள். அவர்களுக்குச் சுத்தமுங் கிடையாது. ஆசாரமுங் கிடையாது; சத்தியமுங்கிடையாது”, என்றது 16-7ஞ் சுலோகம். ஆகவே முற்காட்டிய சுலோகங்களாற் சாஸ்திர விதிகளுக்குக் கட்டுப்படாமல் தன்னிஷ்டப்படி மற்றவர்களும் வரவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்காக உபவாசம் உபவாசம் என்று கூறுவது சாதுக்களைப் பயமுறுத்தும்படி தன்னினத்தாரைத் தூண்டுவதாகிறது. (தொடரும்)

உ

# சமணக் கூட்டத்திற் சூலைநோய்.

(உத்தரமேரூர், சைவத்திருவாளர், அ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்கள்)

ஸ்ரீமத் அப்பர் சுவாமிகள் முதலிற் சைவராய்ப் பிறந்து நடுவிற் சமணராகி முடிவிற் சைவராய்த் திரும்பினார்கள். சமணத்திலும் அதன் பரமாசாரியராகவே அவர்கள் விளங்கினார்கள். ஆகையால் அச்சமயத்தின் அந்தரங்கக்கொள்கைகளின் (Esoteric doctrines) பொருந்தாமைகளெல்லாம் அவர்களுக்கு நன்கு தெரிந்தேயிருந்தன. ஆயினும் ‘நம்பாருளாமையினால்’ சிறிது காலம் அவர்களால் அச்சமயத்தை விடமுடியவில்லை. அப்பால் அவர்கள் ‘ஈசனருள் கூடுதலா, லொவ்வாவிப் புன்சமயத் தொழியாவித் துயரொழியச், செவ்வாறு சேர்திலக வதியார் தாள் சேர்ந்தார்கள். ஒவ்வா......சமயம்—பல ஒவ்வாமைகளையுடைய சமயம். சமணரோ ‘அவருயப்போய்ப், பொருது சைவராய்ப் பெயர்ந்து தம் பிணியொழித்துய்ந்தார். மருவு நம் பெருஞ் சமயம் வீழ்ந்ததுவென மருண்டனர். அதனால் அவ்வாசாரிய மூர்த்திகளைச் சமணத்தில் மீட்டுக்கொள்வதா அல்லது கொன்றொழிப்பதா வென்ற பிரசினை அச்சமணப் பிரதேசமெங்கும் பிரபலமாக வுண்டாகிவிட்டது. உடனே, ‘இவ்விடத்தி லிவன் பிழைக்கி லெமக்கெல்லா மிறுதி’யென நிச்சயித்த ‘பல வமணர்கள் துயருடனீண்டி,மெய்வகைத்திற மறந்திடில் வேந்தனும் வெகுண்டு, சைவனாகி நம் விருத்தியுந் தவிர்க்கு மற்றினி நாம், செய்வதென்னெனா வஞ்சனை தெரிந்து சித்திரிப்பா’ ராயினர். அதன்மேல் அவ்வமண்குண்டர் தம் சமண வரசனை யணுகித் ‘தலைநெறியாகிய சமயந் தன்னை யழித் தன்னுடைய, நிலை நின்ற தொல்வரம்பி னெறியழித்த பொறியிலியை, யலைபுரிவா யெனப்பரவி வாயாலஞ்சாதுரைத்தார்.’ அவனுந் துரபிமானங்கொண்டு அச்சைவ சிகாமணியாரை அழைப்பித்து, ‘உருகுபெருந் தழல்வெம்மை நீற்றறையி னுள்ளிருத்தி’யும், ‘தீயவிடப் பாற்குடைய பாலடிசி லமுதுசெயப் பண்ணி’யும், ‘கோபாதி சயமான கொலைக்களிற்’ றாலிடறச் செய்தும், ‘பாங்கொரு கல்லி லணைத்துப் பாசம் பிணித்தோர் படவில், வீங்கொலி வேலையி லேற்றி வீழ்த்’தியும் ஹிம்ஸித்தான். அத்தனை பலாத்காரங்களையும் அப்பிரானார் சிவகடாக்ஷத்தால் வென்று உய்ந்தார்கள். அரசனும் நாணிச் சைவனானான். அவன் ‘பாடலிபுத்திரத்திலமண் பள்ளியொடு பாழிகளுங், கூடவிடித்து’ அக்கற்களைக்

186958

கொணர்ந்து கட்டுவித்த சிவாலயமே குணதர வீச்சர மென்னுந் தலம். இவை யெல்லாம் சரித்திர சம்பந்தமான வுண்மைகள்.

நிற்க, முற்காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் மதச் சண்டைகள் பல நடந்திருக்கின்றன. புரோடஸ்டாண்டரைக் கத்தோலிக்கரும், கத்தோலிக்கரைப் புரோடஸ்டாண்டரும், கிறிஸ்தவரை மகமதியரும், மகமதியரைக் கிறிஸ்தவரும் மதமே காரணமாக வதைத்த நிகழ்ச்சிகள் இன்றும் சரித்திரப்புத்தகங்களிற் பிரசித்தம். அவற்றுள் அக்காலைப் புரோடஸ்டாண்டரும், கத்தோலிக்கரும், கிறிஸ்தவரும், மகமதியரும் தத்தம் விரோத மதத்தினர்க்குச் செய்த கொடுமைகளை அவ்விரோத மதத்தினரின் சந்ததியார் விளம்பரஞ் செய்துவந்தால் அச்சந்ததியார் காலத்துப் புரோடஸ்டாண்டரும், கத்தோலிக்கரும், கிறிஸ்தவரும், மகமதியரும் மனக்கசப்படைவது இயல்பே. அதற்காகச் சரித்திரக்காரர் அக்கொடுமைகளை மாற்றலாமா? மறைக்கலாமா? அவ்வக்காலத்துச் சரித்திரக்காரர் தத்தங்காலத்துச் சமூகங்களைத் திருப்தி செய்யவேண்டுமென்று உண்மை நிகழ்ச்சிகளை மறைத்தோ மாற்றியோ வெளியிட்டுவருவாராயின் சரித்திர வுலகமே அயோக்கியத்தனமுள்ளதாய்விடும். அங்ஙனமாக, ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளின் சரிதத்தால் இக்காலைச் சமணர் தமக்கு அவமானம் வந்ததாக நினைத்து ரோஷங்கொண்டு பல சபைகளைக்கூட்டி அச்சரிதத்தை ஸினிமாவில் நடித்தல் கூடாதென்று தீர்மானங்கள் செய்து பத்திரிகைகளிற் பிரசுரித்து வருகின்றனர். அவ்வளவில் அவர் நின்றால் அவ்வபிப்பிராயம் ஒருவாறு அங்கீகரிக்கத் தக்கதே. ஆனால் அவர் 'அப்பர் சமணத்தில் தருமசேனராயிருந்தபோது அவருக்குச் சிவன் சூலைநோயைக் கொடுத்துத்தானே அவரைச் சைவத்தில் திருப்பினார். அது பலாத்காரமன்றோ? அது நியாயமாகும்போது எமது முன்னோர் செய்த பலாத்காரங்கள் மாத்திரம் எப்படி அநியாயமாகும்?' என்று ஒரு வாதத்தைக் கிளப்பி அப்பழஞ் சமணரின் கொடுமைகளை ஒழுங்குபோற் காட்டுகின்றனர். அவர் ஏதேனும் ஒரு சமாதானத்தைக் கற்பித்துக்கொண்டாயினும் தம் முன்னோர் செய்கைகளை யொத்துக்கொண்டது மெத்த சந்தோஷந்தான். இங்கு அவர் ஒத்துக்கொண்டபாதகம் அகச்சான்றுகளாலேயும் நிரூபிக்கப்பட்ட விஷயமாதலாற் கிடக்கட்டும். அவர் கண்ட சமாதான



மாத்திரம் இங்காராயவேண்டுவதவசியம். அச் சமாதானம் சிவபிரான் கொடுத்த சூலை நோயும் பலாத்காரந்தானே யென்பது. சுவாமிகள் சமணக்கூட்டத்திலிருந்தபோதே சிவபிரான் அவர்களுக்குச் சூலைநோயைக் கொடுத்தார். சமணவரசனும் அவர்களைத் தன் கூட்டத்துள் வைத்துக்கொண்டே பல படியாலுந் துன்புறுத்தினான். அவன் செய்த அக்கிரமங்களெல்லாம் அரசர் பெருமானாரை அணுகாதபடி அவர்களுக்குத் தோன்றாத் துணையாயிருந்து காப்பருளியவர் சிவபிரான். அவரே தருமசேனர்க்குச் சூலைநோயைக்கொடுத்து அவர்களைச் சமணக் கூட்டத்திலேயே விட்டுவிட்டாரென்றால் அதனருத்தம் யாதாயிருக்கலாமென்று நீதிமான் யோசிக்கவேண்டும். 'சமணரே! யாம் தருமசேனனுக்குச் சூலைநோயைக் கொடுத்தோம். அதனால் அவன் உம் சமயத்தின் இழிவையும் சைவத்தின் ஏற்றத்தையும் உணர்ந்து சைவனாவான். நீவிர் உம் சமய சாமார்த்தியத்தால் அச்சூலையை அவனுக்குத் தவிர்ப்பீராக. அஃதொன்றே உம் சமயத்தை அவனுக்கு மெய்ப்பித்து அவனை அதிலிருத்தும்' என்று சிவபிரான் கூறி அச்சூலையை ஒரு சோதனையாக வைத்தாரென்பதே துணியத் தக்கதாம். அஃதொரு சோதனைதா னென்பதும், சமணரும் அந்நோயைத் தீர்க்கப் பெரிதும் முயன்றனரென்பதும், முடிவில் ஒன்றும் முடியாமல் தோற்றனரென்பதும் 'மெய்வகைத்திறம்' என்ற பெரிய புராணத் தொடராற் குறிப்பிடப்படும். அத்தகைய சோதனையைப் பலாத்காரமென்னலாமா? அன்றியும் சிவபிரான் முன்னொடு பின்னோக்கிக் காரணகாரிய சம்பந்தத்தால் அச்சூலையை அத்திருமூர்த்திகட் கருளினார். 'முன்னமே முனியாகி யெனையடையத் தவமுயன்றா, னன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வ மெனவருளி', 'பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுந் தொண்டரையாளத் தொடங்குஞ் சூலை வேதனை' என்ற அடிகளால் அவ்வுண்மை விளங்கும். ஆனால் நீற்றறையி லிடுதலாதி கொடுமைகள் மேற்காட்டியபடி சோதனையுமல்ல; காரணகாரிய சம்பந்தத்தால் அப்பெரியாரைத் திருத்த நிகழ்ந்த அச்சமயத்தின் தெய்வ காரியமுமல்ல. வாகீசப் பெருந்தகையார் சமணத்தை வர்ஜித்துச் சைவத்தைத் தழுவியதாலேயே சமணத்தை அழித்தார்களென்றும், ஆகையால் அவர்களைக்கொன்று விடுவதே சமணத்துக் காற்றுஞ் சிறந்த ஊழியமாமென்றும் அச்சமணர் கொண்ட துணி

மானமே யன்றோ அவ்வரசன் செய்த கொடுமைகளுக்கெல்லாங் காரணம்? 'தருமசேனர்க்கு வந்தவத் தடுப்பருஞ் சூலை, யொருவ ராலுமிங்கொழித்திடாமையி னவருயப்போய்ப், பெருகுசைவராய்ப் பெயர்ந்து தம் பிணியொழித் தாய்ந்தார், மருவு நம்பெருஞ் சமயம் வீழ்ந்ததுவென மருள்வார்', 'தலைநெறியாகிய சமயந் தன்னையழித் தான்னுடைய, நிலைநின்ற தொல்வரம்பி னெறியழித்த பொறியி லியை, அலைபுரிவா யெனப்பரவி வாயாலஞ் சாற்றுரைத்தார், கொலை புரியா நிலைகொண்டு பொய்யொழுக மமண்குண்டர்', 'அல்லிரு ளன்னவர் கூற வரும்பெரும் பாவத் தவன்றான், றொல்லைச் சமய மழித்துத் துயரம் விளைத்தவன் றன்னைச், சொல்லு மினிச் செய்வ தென்னச் சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர், கல்லுடன் பாசம் பிணித்துக் கடலிடைப் பாய்ச்சுவ தென்றார்' என்பனவாதிய பாசுரங்களை நோக்குக. ஆகவே சமணமன்னன் ஆற்றியவையே பலாத்காரமென்பது சித்திக்கவில்லையா? அச்சோதனையை இப்பலாத்காரத்தோடு சமப்படுத்திப் பேசுவது விஷயங்களின் வேற்றுமைத் தாரதம்மியங்களை யறிந்து விவகரிக்கமாட்டாத சாமானியர்க்கே அடுக்கும். இக்காலைச் சமணர் தாங்கூறும் அப்போலிச் சமாதானத்தால் சிவநிந்தை செய்கின்றாரென்பதே ருசுவாகும்.

ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளின் சரிதத்தை விளக்குந் திவ்விய பிரமாணம் எங்கள் பாக்கியப் பயனாஞ் சேக்கிழார் சுவாமிகளருளிய பெரிய புராணம். அது இயற்றப்பட்டுப் பன்னூறாண்டுகட்குமேலாகின்றன. இக்காலை அதன் விரோதிகளின் முன்னோர்களில் ஒருவராவது அத்தப்பிரமாண நூலைக் கண்டித்தெழுதும் எண்ணமும் வன்மையுங் கொண்டாரிலர். இப்போதுள்ள அதன் பகைவரோ அந்நூலைப்பற்றி வாயில் வந்தன பேசிவருகின்றனர். அது 'Devils rush where angels fear to tread' என்ற ஆங்கிலபழமொழியை நினைப்பூட்டுகின்றது.

'பல்லவ மன்னனால் அப்பருக்குச் செய்யப்பட்ட கொடுமைக ளெல்லாம் தண்டனையே. அதற்கு அவரிடங் காணப்பட்ட ராஜாங்கத் துரோகமே காரணம். அவனிடம் மதத்துவேஷங் கிடையாது' என்று அதிமேதாவியாரொருவர் ஒரு சமணக் கூட்டத்திற் பேசியுள்ளார். அவர் பெயர் கிருஷ்ணசாமி ஐயரென்பது. 16—9—36 'ஹிந்து'வில் 'Mr. Krishnaswami Aiyer stated



that the several punishments meted out to the Saint were inflicted by the Pallava King for high political treason and not on account of any religious animosity' என வந்திருப்பது காண்க. பல்லவ மன்னன் அப்பர் பெருமானார்க்கு ஆற்றிய அக்கிரமங்களை யெல்லாந் தண்டனை யென்னும் பெயராலாயினும் ஒப்புக்கொண்டு அவற்றின் காரணங்களை மதவிரோதமென்று சொல்லாமல் ராஜாங்கத் துரோகமென்று அவர் சொல்லிவைத்தார். அரசன்பாலுள்ள மதத்துவேஷமே காரணமென்பதற்குப் பெரிய புராணம் ஆதாரம். அரசர் பெருமானார்பாலுள்ள ராஜாங்கத் துரோகமே காரணமென்பதற்கு அவ்வையர் காட்டிய ஆதாரம் யாதுமில்லை. ஒரு கூட்டத்தாரை மகிழ்விப்பதற்குப் பயனில் சொற்பாராட்டுதல் அவர் மரபுக்கடாதென்க.

அப்பர் சரிதம் ஸினிமாவில் வருமானால் கிளர்ச்சிகள் அதிகமாக வுண்டாகுமென்று சமணக் கூட்டங்கள் சைவர்களைப் பயமுறுத்துகின்றன. இக்காலைச் சைவரிற் படித்தவருள்ளும் பலரிடம் சைவ சமயஞானம் மிகவும் மட்டு. அதனால் ரோஷம் பரஸ்பர நேசம் முதலியனவும் அப்படித்தான். ஆகலிற் பிறர் செய்யும் வைதிக சைவநிந்தையையும் பயமுறுத்தலையுங் கண்டு அச்சமூகம் சற்றுப் பின்வாங்கி நிற்கிறது. அது கொண்டுதானே அச்சமூகம் எதிர் காலத்திலும் அப்படியே இருக்குமென்று அச்சமணக் கூட்டங்கள் எண்ணி ஏமாறவேண்டாம். பழமையை நினைத்த அவைகள் கிளம்பாமலிருப்பதேமேல். ஸ்ரீமத் அப்பர்சுவாமிகள் சரிதை ஸினிமாவில் வராமல் தடுக்கப்பட்டுவிட்டால் சைவருக்குக் கெட்டுப்போவது ஒன்றுமில்லை. ஆனாற் சுதேசமித்திரன் 8-1-37 வெள்ளி வெளியீட்டில் 'வேல் பிக்சர்ஸ் கம்பெனியார் மதத்துவேஷம் ஏற்படக்கூடிய படங்களைத் தயாரிக்காமலிருக்க உண்மையில் விரும்பினால் அப்பர் சரிதத்தை மூலபுராணத்திற்கு மாறாக எழுதியதுபோல் ஜைனர்களை அப்படக் காட்சியில் காட்டாமல் கதை எழுதிப் படமெடுத்துக் கொள்ளலாம்' என்று சென்னைத் தென்னிந்திய ஜைனமகாசங்கக் காரியதரிசி ஸ்ரீமாந் டி. எஸ். ஸ்ரீபால் எழுதியுள்ளார். இங்ஙனம் சமணர்களே காறியுமிழுமாறு ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளின் சரிதையை மாற்றியெழுதிய பெரியார் யாவரோ? அவர் அசைவராயின் ஒழிக. சைவராகவே யிருப்பாரானால் அவருக்கு ஐயோ. ஓ! வைதிக சைவர்களே! உங்களுடைய பிள்ளைகளையாவது பௌருஷத்தோடுகூடிய சைவர்களாய் விளங்கும்படி பயிற்றிவரக் கூடாதா? உயர்த்துப் பிடிப்பாரின்றிச் சாய்ந்து கிடக்கும் இடபக் கொடியைச் சிறிது ஆண்மையோடும் மானத்தோடுங் கண்திறந்து பாருங்கள்.

உ

# கந்தபுராண காப்புச் செய்யுளின் உரைவிளக்க மறுப்பு.

(யாழ்ப்பாணம், சிவஸ்ரீ, ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்)

வித்துவான்களே!

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

இதன்பொருள்: திகழ் தச கர செம்முகம் ஐந்து உளான்—விளங்கா நின்ற பத்துத் திருக்கரங்களும் செவ்விய ஐந்துதிருமுகங்களுமுள்ளவராகிய சிவபெருமானது, சகட, தேருக்கு, சக்கர-சக்கரமாய் (சில்லு) நின்ற, தாமரை நாயகன், தாமரைக்குத் தலைவனாகிய சூரியன், அகட—வயிற்றின் கண்ணே, சக்கர வில் மணி ஆ உறை-வட்டித்த ஒளி பொருந்திய இரத்தினமாக இருக்கப்பெற்ற, விகட சக்கரன்—விகடசக்கர விநாயகரது, மெய் பதம் போற்றுவாம்—மெய்ம்மையாகிய திருவடிகளை (இந்நூலினிது முடிதற் பொருட்டு) யாம் துதிப்பாம் என்றவாறு.

திகழ் தசக்கரம் திகடசக்கரமெனப் புணர்ந்தமைக்கு விதி வீரசோழியத்துச் சந்திப்படலத்திற் பதினெட்டாஞ் செய்யுள் "பதினைந்தினோ டெண்ணிரண்டாய்த், தோன்றுமுடற் பின்றகாரம் வரினிரண்டும் மொருகா, லான்ற வைந்தா முடலாம்" என்பதாம்.

இதுவே உண்மையான உரையாயிருக்க சின்னக்காஞ்சிபுரம், திரு, சேனாபதி நடேச செட்டியாரவர்கள் "திகடசக்கரன்" என்பதை "திகழ்கரன்" "தசைக்கரன்" எனப்பதச்சேதம் பண்ணித் தம்மனம் போனவாறு உரையு மெழுதுகிறார். ஒரு இலக்கணமுங் காட்டாது மனதில் நினைத்த நினைத்தபடி இவ்வாறு எழுதலாமா? இலக்கண விதி எங்கே என்பதை அறிந்துகொள்ளுங்கள். தசக்கரம் தசைக்கரம் என அந்நுவயம் கொள்ளலாமா?



## ஒரு வினா?

ய-ம் ஆண்டு ரு-ம் திங்களில் வெளியான சிவநேசனில், கந்த புராணக் காப்புச் செய்யுளின் முதல்வரி திகழ் கரன், தசைக்கரன் என்று பகுத்துப் பொருள் காட்டப்பெற்றிருக்கிறது. நக்கீரர் வெண்பா உதாரணமாம். இவை பொருந்துமா? மாயோன் மருகன் என்று நக்கீரர் கூறியதைக் கச்சியப்பர் ஏன் விடுத்தார்? விளக்கமான விடையை எழின்மிகு தமிழறிஞர் தந்து எங்கள் ஐயத்தை அகற்றுவார்களாக.

ஒரு மாணவகன்.

# விபரீத விளக்க மறுப்பு.

(விழுப்புரம், திரு, சு. முத்துக்குமாரசாமி அவர்கள்.)

நிகழும் தாது மார்கழியீ வெளிவந்த சிவநேசன், 124-வது பக்கத்தில் "கந்த புராணக் காப்புச் செய்யுளின் உரை விளக்கம்" என்ற தலைப்பின்கீழ், திரு, நடேச செட்டியாரென்பவரால் எழுதப்பட்ட விரிபொருள் விவரம் கண்டாம்.

இதுகாறும், பல அறிஞர்களாலும் ஒப்புக்கொண்டுகையாண்டு வரப்பெற்ற தெளி பொருளிருக்கவும், நண்பர் இவ்விளக்கம் என்ன பயன் கருதி யெழுதினரென்பது தெரிகிலம். ஒருவேளை முந்திய பொருட்கோள் முறையில் ஈடுபட்டின்புறுவோரை மாற்றித் தன் புறவிக்கக் கருதினர் போலும்.

திகழ்தசம்-திகடசம் எனப் புணர்தல் தவறென அரங்கேற்று சபையோர் மறுத்தனர், முருகன் ஆதாரங்காட்டி நிலைப்பித்தனரென இக்கவிக்குச் சரிதை வழங்குவதுண்டு, அந்தப் பிரஸ்தாபம் ஒன்றும் நண்பர் எடுத்துக்கொள்ளவில்லை. முந்திய பொருளுக்கு, ஒரு குறை காட்டித் தமதுரையை நாட்ட முன்வந்ததாகவுமில்லை.

திகழ்கரன் - தசைக்கரன், என்று இருபிளவாக்கியதும் நக்கீரர் வெண்பாவை இழுத்துப் பிணைத்ததும், அதன் பொருள் ஈசன் மகாரிருவரையும் புகழ்ந்ததாகுமென்று மற்றொன்று விரித்ததும் விபரீதம். 'மாயோன் மருகனே' என்றாற்போல 'ஒருகைமுகன் தம்பியே' என்று முருகனைத் துதித்ததன்றி, விநாயகருக்குரிய துதிப்பொருள் இன்று. உண்டென்னில் 'ஈசன்மகனே' என்றதால்

சிவபிரான்றுதியும், அதுபோல் விட்டுணுதுதியுமுளவென்றாகிப் பொருள் சிதையும். ஈசன் மகன், மாயோன் மருகனென்ற சிறப்பு விநாயகருக்கும் முருகனுக்கும் ஒருங்கு பொருந்துவன வேனும், விளிப்பொருள் முருகனையே பற்றி நின்றதுண்மை.

'இறைவன்றிறம்' என்ற பகுதியில், "தனது நுதற்கண்ணைத் துப் போழல் எழுப்பி" என்ற வசனம் என்ன முடிவு கொண்டதென்பது மலைவாம். "ஒருகைமுகனுக-வேழமுகனுக" என்ற குறிப்புகளையும், கயமுகவதம், வள்ளியம்மையின் மனத்தைக் கனிவித்தல் முதலாக நின்று பயனில்லா விஷயங்களையும் வரைந்து வைத்த கொடுமை என்னே அறிகிலம்.

தசக்கரம் என்பதற்குப் பத்துக்கைகளென்று செம்பொருளிருக்கவும், தற்போத முனைப்பினல் தசைக்கரம் எனத் திரித்துக் கொண்டது மிக்க அருவருப்பும் ஆதாரமற்ற விஷயமுமாம். "வேழமுகத்துள்ள ஒரு நீண்ட கொழுத்த" என நண்பர் வரைந்த விஷயத்துக்கு மூலத்திற் பகமுண்டா? காட்டிற்றழைமுறித்துத் தின்று சுனைநீர் குடித்துத் திரியும் யானையன்றோ கொழுத்திருக்கும், அவ் விசேடம் ஈண்டுப் பொருந்துமோ? சதை நிறைந்த கரம் என்றால் இனம் பற்றி அவருக்கு எலும்பு, நரம்பு, மலசலம் ஆகியனவும் கொள்ளவேண்டியதாகுமன்றோ?

அசுரனுகிய கயமுகனது துதிக்கைக்குக் கூறத்தக்க கொழுப்பு சதை முதலியன இடம் தெரியாமல் மாற்றி வரைந்தனர்போலும். பாவம்! "அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்த அகரஉகர மகரங்கள் தம்மாற்-பகருமொரு முதலாகி" விளங்கும் விநாயகக் கடவுளது துதிக்கையில் கொழுப்பு தசை முதலிய இன்றென்று இனியேனும் உணர்வாராக.

எனவே, அன்பர்கள் தவம் நிறைந்துழிக் காணும்படி அருளாற் காட்டும் தகுதியினது அத்திருமேனி யென்பதாயிற்று. துதிக்கையைத் தசைக்கரம் என்னில் "நிகழ்கரம்" என்பவற்றில் தசையில்லையாதலும், மற்றைக் கரங்களை நிகழ்கரம் என்னில், துதிக்கைக்குத் நிகழ்ச்சியில்லையாதலும் கொள்ளநேருமாதலின் நண்பரது நிச்சயம் யாதோ?



செம்முகம் ஐந்தும் கொண்டவன் என்பதன் பொருள் விநாயகருக்குப் பொருந்தியதெப்படி? கயமுக அவுணனைத் தந்த மெறிந்து உடல் பிளப்பித்தவுடன் அவன் முன் பெற்ற வரத்தால் இறவாது மூஷிக வடிவுகொண்டு போரிட வந்தனன். பெருமான் அதன் முதுகிலிவர்ந்து பரியாக்கிக்கொண்டன ரென்பதன்றி, கொழுத்த சதைக்கரத்தால் மடக்கிப்பிடித்துக்கொண்டது, அழகிய (மெலிந்த) கரத்தால் தந்தக் கொம்பை யொடித்து அவனை விண்ணேற்றியது முதலிய உரைகள் போலியே என்க. திகடசக்கரக் கவியோ டொழியாது, நக்கீரர் கவிக்கும் இவ்வுரையோடு பிணைபட வேண்டிய குறை நேர்ந்தது பரிதாபம்.

கச்சியப்ப சிவாசாரியருக்கு முருகன் கருணையினல் எடுத்துக் கொடுத்த அருள் மொழியாகிய முதலடி,, கணேச மூர்த்தியின் கரத்திலுள்ள தசையைச் சிறப்பித்த பொருளைக் கொண்டிருக்கு மென்று அறிஞர் கூறுர்.

கயமுகனென்னும் தீய அவுணன் செய்யுங்கொடுமையாற்றளர்ந்த அயன் விண்டு வாதிய தேவர்கள் ஒருங்கு திரண்டு கயிலையடைந்து சிவபிரான் திருமுன் தொழுது தம் குறைபாடு கூறி வேண்டலால், இறைவன் அவர்க்கருள் புரிந்தனுப்பி, அம்பிகையுடன் அங்குள்ள ஓர் தருவனத்துக்சேகி அதனிடையேயுள்ள மண்டபத்தில் விளங்கும் அரிய சித்திரங்களை அம்மைக்குக் காட்ட, அவள் முழுஃனத்துடன் பார்க்கையில் அருட்டிறத்தால் அகண்டமாகிய பிரணவமானது இரு வடிவுகொண்டு பிடியுங் களிறுமாகிப் புணர்வது கண்ட இறைவி, பரமனிடம் வியந்து வினவ அப்பரமன் உனது பெருமையால் விளைந்த நிகழ்ச்சியே அஃது எனக்கூறினன். அவ்வமயம் அவை பிரிந்து பழயபடி ஓரே வடிவாயது உடனே,

> "அக்கணத்(து) ஆயிடை ஐங்கரத்த வனருள்
> முக்கணல் வாயினன் மும்மதத்தா றுபாய்
> மைக்கருங் களிறெனு மாமுகத்த வன்மதிச்
> செக்கர்வார் சடையனேர் சிறுவன் வந்தருளினன்"

(கந்தபுராணம்)

என்னும் வாக்கை நோக்கின் அவ்வாறு சகளீகரித்த அருள் வடிவினரான விநாயகக் கடவுளது துதிக்கரமானது அடியவர்கள்

ஆதிக்கரமேயல்லது கொழுப்பு சதை நிறைந்த காட்டானைக் கரமன்றென்பதே துணிவு. மும்மதங்கள் கூறப்படுவதால் அவை தசையின் கொழுப்பாகுமென நண்பர் துணிவர் போலும். யானை யென்ற உபசாரத்துக்கேற்ப மதங்கள் உருவகித்த தன்றி அவை தூலவுடலுக்குரிய நிணக்குழம்பன்றென்க. அஃது எவ்வாறென்னில் பௌராணிகருள் ஒரு சிலர், விநாயகருக்குக் கபோல மதமும், மத்தகமதமுமென இருமதங்களன்றிக் கோச மதம் இன்று மும்மதமென்றது போலி உபசாரமென்று கூறுவது துண்டு. அம்முறையில் மற்றைய மதமும் உபசாரமேயாகும். எனவே மதங்கள் இல்பொருளாய்வறிதேகூறப்பட்ட புனைந்துரையு மன்று. மதங்களாவன: ஞானமதம், விநோதமதம், அருள்மத மென்பனவே யுண்மையிலுள்ளனவாம். அகண்ட வியாபகத்துவ மான முற்றறிவும், அற்புதச் சித்திகளியற்றும் அதிகாரத்துவமான பேறிவும், சர்வான்மாக்களிடத்தும் குறையாமற் செலுத்துகின்ற கருணையுமே அவையென்க.

"ஞானம் விநோதம் நல்லருள் மூன்றும்
பொழிதரு மதமாம் பொற்புகர்க் களிற்றை
வழிபடும் பெரியோர் மரபினிற் றெளியாச்
சிற்சிலர் பிழைக்கிற் சீரிய முனிவோர்
பரிகலத் தருள்வரே யன்றிப் பைம்புற்
கறித்துத் தின்பன கதறக் கொய்துண்டு
ஏனையர் சிலர்போன் றிழிவுறு ரன்றே"

என விளக்கியுள்ளார், சமயருத்திர மென்னும் நூலின் காணபத் தியப் பகுதியில் ஸ்ரீதண்டபாணிசுவாமிகள். வேதவுபநிஷதங்களின் கருத்தும் அபரோக்ஷநிலை யடைந்த ஞானிகள் கருத்தும் அதுவே என்னலாம்.

முன்னோர் மொழிந்த முழுப்பொருளே சால்பெனக்கொண்
டன்னோ ரடிதாழ்ந் தமைதல்முறை—தன்னோர்
அகத்தாற் பொருள்வே றறைந்துவி பரீதஞ்
சகத்தோர்க்குச் செய்தல் தகா.

உ

# எலிமயிர்க் கம்பலம்
## அல்லது
# பனிப் பகைப் படாம்.

(சின்னக்காஞ்சிபுரம், திரு, சேனாபதி நடேச செட்டியாரவர்கள்)

சிந்தாமணி ஆசிரியரின் கருத்துண்மை.

சீவகசிந்தாமணி 13-முத்தியிலம்பகம்.

2685 1. வெள்ளி லோத்திரம் விளங்கும் வெண்மலர்க்
கள் செய் மாலையார் கண்கொளாத் துகில்
அள்ளி யேந்திய அரத்த அல்குலார்
ஒள் எரிம்மணி உருவப் பூணினர்......87.

2686 2. செந் நெருப்புணுஞ் செவ்வெலிம் மயிர்
அந்நெருப்பு அளவாய் பொற் கம்பலம்
மன்னர் உய்ப்பன மகிழ்ந்து தாங்கினர்
என்னர் ஒப்பும் இல்லவர்கள் என்பவே......88.

இதன் அன்வயம்:— வெள்ளி லோத்திரம் (போன்ற) கள் (சிந்தும்) வெண்மலரால்செய்த மாலையார்; அரத்தத்தின் (சாறு) அள்ளிவந்திய, கண் கொளா (கொள்ளும்) துகில் (உடுத்த) அல்குலார்; ஒள்ளிய உருவினர்; எரிம்மணிப் பூணினர்;—

மன்னர் ஒப்பஎன்னரும் உய்ப்புஅன்ன (வேறு) இல்லவர்கள் (என்ன) செந்நெருப்புணும் செவ்வெலிம் மயிர், அந்நெருப்பு அளவு ஆய் பொற் கம்பலம் மகிழ்ந்து தாங்கினர் என்பவே......

இதன் பொருள்:— வெள்ளி லோத்திரம் (வெள்ளில்: வெண்பஞ்சு) போல் விளங்கும். தேன் சிந்தும் வெள்ளிய மலர் மாலை அணிந்த, அரத்தம் செம்பஞ்சின் சாறு அள்ளியதுபோல் செறிந்த செஞ்சாயத்தில் தோய்த்த, உடுத்தினவர் தம் உருவம் கண்ணில் தோன்றும்படிச் செய்யும் அவ்வளவு மெல்லிய உருவினதான துகிலை (சீரை) உடுத்திய அல்குலாரும்; செஞ்சுடர் அன்ன ஒளிவீசும் மணிகள் பதித்த பூண் அணிந்தவரும்; ஒள்ளிய அழகுள்ள மேனியை உடையவருமான மகளிர்கள் (இல்லவர்கள்: இல்லக்கிழத்திகள்). பனிக் காலத்தில் சீவகமன்னற்கும் தமக்கும் செறிந்த குளிர் கலிவு நீக்குதற்குச் செந்நிறத்த உருவினதாய், செந்நெருப்பு அளவு வெப்பந்தரவல்லதென ஆராய்ந்து தமக்கு உய்ப்பு அன்னகொண்ட எலி (எரி) மயிர்க் கம்பலத்தை உடல் பனிப்பும், குளிரும், இல்லையாம்படி செய்துக்கொள்ள மகிழ்ந்து தாங்கினர்கள் என்பது.

2685ல் கண்ட உருவ வர்ணனை: திருமகள் (இலக்குமியின்) செவ்விய ஆடை தரித்த திருஉருவப் படங்களில் அரத்தச் சாறு அள்ளி வந்தியது போன்ற செந்நிறத்த துகிலும், வெள்ளிய மலர் மாலையும் விளங்க சித்திரித்து எழுதியிருப்பதை நோக்க அறியவரும். காகிதத்தில் சித்திரித்த செந்துகிலின் நிறம் அரத்த மலரின்நிறமாதலும் பண்டைக் காலத்தும் அத்தகைய சாயம் துகிலில் தோய்த்து மக்கள் உடுத்தினர் என்பதும் அறியலாம்.

முச்சங்கத் தமிழ் நூல்கட்கு மெச்சுந் தெளிவுரை தந்த நச்சினார்க்கினியராம் உரை நயந்தருவன்னல் 2686ம் செய்யுட்கு குறிப்பால் உணர்த்திய உரையாவது:—

1. நெருப்பைத் தின்னும் எலி மயிர்க் கம்பலம்; அந்நெருப்பின்
2. அளவுவெம்மைய என்று ஆராய்ந்தபொலிவினையுடைய கம்பலம்;
3. உய்ப்பனவாகிய கம்பலம்;

4. என்னரும் தமக்கு ஒத்தலை யில்லாத மகளிர், குளிர் நீங்குதற்கு மாலையார், அல்குலார், பூணினாராய்க் கம்பலத்தைத் தாங்கினார்.

"என்னர் ஒப்பும்இல்லவர்" என்பதை "என்னருப்புமில்லவர்" என்று பாடமோதி எக்குற்றமும் இல்லாதவரென்றும் உரைப்ப என்று விளக்கி உள்ளார்கள்.

ஆனால் விரிதிரைப் பெருங்கடல் அமிழ்தத் தென்ன தோன்றும்பரிதியஞ் செல்வனின் வழித்தோன்றல்ராய் (சோழகுலதிலகராய்) அருந்தமிழ்க் கடலின் அமிழ்தென எடுத்த, நற்றாமணிவிளக்கெனச்செம்பொருள் செறி, "சிந்தாமணி" எனும் நூல்தந்த, கவலறு கேள்வித்துறைபோகிய, நுவலரு புலமை கொண்ட, மையறு கீர்த்தித் திருத்தகு முனிவர் தம் கருத்துண்மை அறிதல் அரிதெனினும் என் சிற்றறிவினால் தெளிந்த ஒரு உரையைக் கொள்ள முயன்றனன். பொருந்துவன போற்றித் திருந்துவன திருத்தி அறிஞர்கள் விளக்குவார்கள் என வேண்டுகிறேன்.

இச்செய்யுளின் உரைப்பகுதியில் கண்ட "நெருப்பைத் தின்னும் எலிமயிர்க் கம்பலம்", என்பதை ஆற்றொழுக்கில் பொருள் கொண்டால் "நெருப்பைத் தின்னும் எலியின் மயிர்" என்றே கொள்ளக் கிடத்தலால் தற்காலத்துப் புல்வர் பலரின் மதியை மயக்கச் செய்து, நெருப்பைத் தின்னுங் கோழி "நெருப்புக் கோழி" தீக்கோழி என்பதேபோல் "நெருப்பைத் தின்னும் எலி" நீண்டமயிருள்ள எலி என்றபிராணி எனக்கொண்டு "எலியின் மயிர்" "பேரெலி மயிர்", "எலி குதிரை மயிர்", "பூனை மயிர்", என்று பலவாறு பள்ளிச்சாலையில் பயிலும் மாணவர்களுக்கு அமைத்த தமிழ்ப்பாட புத்தகங்களில் வரைந்தும், பயிற்றியும், பேரவைக் கண் எடுத்துக் காட்டாகக்காட்டிச் சொல்வார் தம்கொள்கையால், முற்காலத்து, நூல் வழக்கில் இருந்து, இக்காலத்து, இறந்துபட்டதெனக் கருதும், அன்னம், அசுணமா, அரிமா போன்று மயிரினையுடைய, நெருப்பைத் தின்னும் ஒருவகை எலி என்ற பிராணி ஒன்று இருந்து இறந்துபட்டதெனக் கருத்துள் கொண்டனர் போலும். பெரிய எலி பெரிய பூனை இவைகளின் மயிர் நெய்தற்கு உதவுவன அல்ல என்பதையும் தேர்ந்திலர் ஒரு சாரார். Clothings from Animals:— The other materials were the fur of the musk Rat of America which comes nearest to the bearer in value and that of the rabbit & the hare. என்று கொண்டு மஸ்க் எலி என்ற ஒரு பிராணியின் மயிர் என்பர். இதைவிளக்கஒரு Silver fox என்ற வெள்ளைநரியின் தோலாடை உருவம் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிப்போந்துளது.



2686ம் செய்யுளின் பொருள் கோள்முறை:—

1. செந்நெருப்பு உணும் மயிர், செம்மயிர், எலிமயிர், (எலி - எரி திரிபு மொழி)

2. அந்நெருப்பு அளவு குளிரை உண்ணும், வெப்பந்தரும் எரி மயிர்க் கம்பலம், ஆய் பொற் கம்பலம்.

3. மன்னர் மகிழ்ந்து உய்ப்பு அன்ன (கொண்ட) மயிர்க் கம்பலம்.

4. என்னர் உய்ப்பும் மயிர்க்கம்பலம் ஒப்பு இல்லவர்கள்.

5. என்னர் ஒப்பும் இல்லவர்கள், என்னர் ஒப்பும் இல்லாத மயிர்க் கம்பலம் மகிழ்ந்து தாங்கினார்.

6. மன்னர் ஒப்பு என்னரும் மகிழ்ந்து உய்ப்பு என ஆராய்ந்து தாங்கும் கம்பலம்

7. இல்லவர்கள் (இல்வாழ்வார்கள் யாவரும்) கம்பலத்தின் ஒப்பு வேறு இல்லது என்று மகிழ்ந்து தாங்கினார்கள்.

8. என் அருப்பும் இல்லவர்களாக மகிழ்ந்து கம்பலம் தாங்கினார்.

9. இல்லவர்கள்(இல்லாச்சிரமத்தார்: கிரகதாச்சிரமம்)என் அருப்பும் (வருத்தமும்) சிரமம் இல்லாதவர்களாய்ஆய்ந்தும், ஒப்பும்இல்லைஎன்று மகிழ்ந்து எலி (எரி) மயிர்க்கம்பலம் தாங்கினார்கள்.

இல்லவர்கள்: இல்வாழ்வார்களும், துறவு அறத்தார்களும். இல்லாச்சிரமத்தார்: இல் ஆச்சிரமத்தார்;இதர ஆச்சிரமத்தார்; சிரமம் இல்லாதார்.

(எலி என்ற சொல்லை மெலி என்று ஒரு பெரியாரும், எலி-எலுவா என்ற சிங்களச் சொல்லின் மருவு என்று பெரிய விவாதங்கள் யாழ்ப்பாணத்தில் ஞாயிறு என்ற வெளியீட்டிலும், ஈழகேசரி என்றதமிழ் வெளியீட்டிலும் Andhra என்ற ஆங்கில வெளியீட்டிலும் எழுதிய பெரும் புலவர்கள் திரு, முதலியார், செ. இராசநாயகம் Rev. S. Gnanaprakasan ஆகியவரும் ஆவர்.

செந்நெருப்பு உணும்மயிர்:— செந்நிறத்த சாயம் தோய்த்த மயிர், நெருப்பின் தன்மையான வெப்பங் கொண்ட மயிர் என்பது.

1159. குன்றுண்டோங்குதிரடோள்: குன்று உண்டு ஓங்கு திரள் தோள்; குன்று ஒத்து ஓங்கிய வரையன்ன தோள்; அக்குன்றின் வன்மை கொண்ட தோள் என்று பொருள் தர ஆசிரியர் அமைத்ததேபோல் நெருப்புப் போன்ற சாயந் தோய்த்த மயிர் அந்த நெருப்பின் அளவு வெப்பந்தருஞ் சிறந்த மயிர் என்றதால் எரியின் சிறந்த மயிர் எரிமயிர். குன்றுண்டிண்டோள்: குன்றுஉண் திண்தோள் (திருப்புகழ்) உண்ணும். உண்டு: உவம வாசகம். என்று 1159ன் உரையில் குறித்த உரையாசிரியர் உண்டு தின்னும் எலி என்ற பொருள் தோன்ற உள்ளதால் ஐயம் கொள நேர்ந்தது.

ஆரத்தன்ன சிறந்த கம்பலத்தை மகிழ்ந்து தாங்கின மகளிர் ஆரத்தன்ன துகிலும் உடையாகக் கொண்டவர் என்பது ஆசிரியர் கருத்தாகும். செம்மயிர்க் கம்பலம்: செமக் காலம் என மருவியது.

அரத்த நிறக் கம்பலமே அரத்தந்தன்ன கம்பலம்; ரத்தன கம்பலம் என்பது. அதுவே சிந்தாமணியில் ஆண்ட எலிமயிர்க்கம்பலம். இஃது இக்காலத்தும் ரத்தன கம்பிளி என குளிர்காலத்தில் துய்த்தற்கு உரியதாயும் உள்ளது யாவரும் அறிந்ததே. கம்பலம் செய்தற் குரிய மயிர் ஆட்டின் மயிர் என்பது யாவரும் அறிந்ததே. வெய்ய பனிக்குப் பகையாம் காய்கதிர்ச் செஞ்சுடர் இல்லாத பனிப் பருவ காலத்திலும் நீர் விளையாட்டின் பின்னும் அச்செஞ்சுடரின் அளவு வெப்பந் தந்தும் செந்நிறங் கொண்டும் குளிர் நலிவு அகற்றுந் தன்மையதென்று ஆராய்ந்து துய்த்து இன்புறக் கொள்ளத்தக்க இன்றியமையாத பொருளாகும் எலி மயிர்க் கம்பலம்.

ஆனால் அந்நெருப்பைப்போல் சுடுதல் வேகவைத்தல் முதலிய தீய குணங்கள் இல்லாது அணிவார்க்கு இன்பந்தரலால் மகிழ்ந்து உய்த்தற்கு உரியதாகும் மயிர்க் கம்பலம் என்றார் ஆசிரியரும்.

மேலும் எரிமணி பதித்த பூணினராதலால் செந்தழல் கொள்ளவும் மகிழார் அந்நெருப்புத் தணலும் குளிர் காற்றினால் தழல் அழற்றவும் மாட்டா என்பதும் தேர்ந்து ஆய்ந்து கம்பலம் கொண்டு மகிழ்வர் என்பது.

2685. "ஒள் எரிம்மணி யுருவப் பூணினர்"
2686. "செந்நெருப் புணுஞ் செவ்வெலிம் மயிர்"

என்ற இவ்விரு தொடர்களில் எரிம் மணியும், எலிமயிரும், எரியும் மணி, எரியும் மயிர். எரியும் மணி: பிரகாசம் தரும்மணி. எரியும் மயிர், குளிர் அற்றுப் போம்படி செய்யும் வெப்பங்கொண்ட மயிர். மணி: செஞ்சுடர் தோன்ற ஒளிவீசும் இயல்புள்ளது. எரிமயிர்: செஞ்சுடரின் நிறத்தாலும், வெப்பத்தாலும், அழகாலும் இயற்கையாக வெம்மை தருவது. எனவே எலிமயிர்: எரிமயிர் என திரிபுப் பொருளாக்கி உரை நேர்தல் சிறப்புடைத்தாகும்.

அஞ்சனக் கண், பவளவாய் என்பன ஒப்பு மொழிமுன் நிற்றலால் மூன் மொழி ஒப்புத் தொகையாதல்போல் செவ்வரிம் மயிர் என்று செந்நிறத்தையும், நச்சுமரம், மருந்துமரம் இவை முன்மொழித் துணிபுத் தொகையாதலால் செந்நெருப்புணும் மயிர் என்றும், நச்சும், மருந்தும் உயிரையும், பிணியையும் போக்குதல்போல் குளிரைப் போக்கும் திறத்தால் ஒப்பும், துணிபும் நிறத்தாலும் வெப்பத்தாலும் தோன்றக்கிடப்பதை ஆசிரியர் தம் கருத்தை ஒளித்து மறை பொருளாக்கி அமைத்ததை அறிந்தே பொருள் விளக்குதல் செம்பொருள் பயப்பதாகும்.

அந்நெருப்பு அளவு உணும் கம்பலம்:- பனிமழை பொழியும் பருவங்களிலும் மழைக்காலும் நீர்விளையாட்டில் ஆண் பெண் பாலார்யாவர்க்கும் உடலில்தோன்றும் குளிர்நலிவு துளக்கம்முதலியவை தாம்கொண்டுவெப்பந் தருதலால் குளிர்வரை நாடாம் ஏமாங்கத நாட்டில் உள்ள இல்வாழ்வார்களும் சிறுரும் பெரியாரும் தாம் உய்ய ஒப்பில் பொருளாக்கொண்டது கம்பலமாதல்போல் ஏனைய நாட்டில் பனிப் பெயல் பருவங்களில் மக்கள் மகிழ்ந்து ஏற்பது நெகிடி, ஞெகிழி, நெருப்புக் குவியலும் தீச்சுடர்க் கொள்ளியுமேயாகும். நெகிழ்: தீ: நெகிடி, நெகிடி, ஞெகிழி என



மருவியது. குளிர் நலிவு நீக்கச் செய்யும் நீக்குவியல் ஆகும். இதனால் கம்பலம்: கம்பலா நீதி: கம்பல்: கம்பம் Kampam: நடுக்கத்தை, லாதி: போக்கக் கூடியது இதி: எப்பொருளோ அதுகம்பலம் எனப்படும். கம்பல: கம்: to wish விரும்புவது Kambala குளிர் காலத்தில் விரும்பப்படுவது கம்பலம் ஆகும்.

"எரிசுடர் நெருப்பை நீர்என்ன வேட்டனர்
தருகுளிர் நீரினைத் தழலின் அஞ்சினர்"

பெரும் பனிப் பெயல் காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் விரும்புவதும், அஞ்சுவதும் நெருப்பும் நீரும். பனிப் பருவத்தில் நெருப்பை வேனில் பருவத்து நீர் என விரும்புவர். நெகிடி கொண்டு குளிர் நீக்குவர். ஆனால் குளிர் தருநீரினை வேனிற் காலத்து நெருப்பென நீரில் குளித்தலை நெருப்பில் குளித்தலைப் போல் அஞ்சினர் என்று பருவ பாகுபாட்டில் உடற்கு இன்பம் பெறும் மக்கள் இயல்பு கூறினர் காளத்தி புராண ஆசிரியர்.

இதனால் குளிர்வரைநாட்டில் செந்தழலும் தண்மையுறுதலால் மக்கள் தம் உடற்குறும் பனிப்பு நீங்க இயற்கையில் வெப்பங்கொண்ட ஆட்டின் மயிர்க் கம்பலத்தை ஏற்றனர் என்றும், சிந்தாமணி யாசிரியர் வடபுலத்தின் மக்கள்தாம் ஆராய்ந்து கொண்ட ஒரு உய்ப்புப் பொருளையும் ஆனால் மதுரைக் கணக்கு ஆயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நெடுநெல் வாடையில் தமிழ் நாட்டில் மக்கள் பெரும்பனி நலிவை அகற்றிய ஆற்றினை விளக்கியதில்:—

7. மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
.................................
12. குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்"

வையகம் பனிப்ப பொய்யாவானம் புதுப்பெயல் பொழிந்ததால் பெரும் பனியால் நலிவு எய்திய மக்கள் பலரும் ஒருங்கு குழுமி செந்தழல் வளர்த்துத் தம் உடற்குறும் குளிர் நலிவு நீங்கிட செந்தழலில் தம் கைகளைக் காய்த்தி அதில்கொண்ட வெப்பத்தைப் பறை கொட்டுதல் போல் பற்கள் துளக்கமுற டைஉ என ஒலிதோன்ற நடுங்கும் தம் கன்னங்களில் பொத்தி வைத்துப் பன்முறையும் முயன்று இன்புறுவர் பெரியார்கள் இல்லின் வெளிப்புறங்களில் என்றும்,

ஆனால் சிறுவர் சிறுமிகள்:—

..................
64. கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்
பகுவாய்த் தடவின் செந்நெருப்பு ஆர
ஆடல்மகளிர் பாடல் கொளப் புணர்மார்
..................

என்றதால் கல் என்ற ஒலியோடு வீசும்காற்றுடன் கலந்து மழைத்துளிகள் சோனைமழையாய்ச் சிந்திடத் துளக்கமுற்று ஆடல் புரியும் மகளிர்களும் மற்றும் யாவரும் ஆடும் விளையாட்டை வெறுத்தும் கருப்பஞ்சாறு தண்ணிய [illegible] உண்ணவும் மனம் இல்லாராய் இல்லங்கள்

தோறும் செந்தழல் வளர்த்து அதைச்சூழ நெருங்கிஇருந்து இன்புறுவது ஒப்ப எக்காலமும்பனிநீர்ப்பெயல் அறாது பொழியும் குளிர்வரைநாட்டில் செந்தழலின் வெப்பத்தினும் மிகுந்து எளிதில் பெறக்கூடிய இயற்கை வெப்பங்கொண்ட மயிர்க் கம்பலத்தைக் கொண்டு பனிக்காலங்களில் மகிழ்ந்தனர் என்றும் மக்கள் தம் உடல் வளங்கண்ட ஆசிரியர் திருத்தக்க தேவர் சீவகமன்னனின் மகளிர்குழுவினையும் காமஇன்பத்தையும் நுவலும் முகத்தால் வியந்ததாகும்.

சிந்தாமணி, 8. விமலையாரிலம்பகம்.
எலிமயிர்க் கச்சு "முகபடாம்"

1898 புகழ்வரைச் சென்னிமேல் பூசையின் பெரியன
பவளமே யனையன பன்மயிர்ப் பேரெலி
அகழும் இங்குலிகம் அஞ்சனவரைச் சொரிவன
கவள யானையின் நுதல்தவழுங் கச்சுஒத்தவே......

இதன் அன்வயம்:— புகழ்வரைக் கவள யானையின் நுதல் தவழும் பெரியன, பவள மேயனையன பேர் எலிப்பன் மயிர்க் கச்சு அஞ்சனவரைச் சென்னிமேல் பூசையின் அகழும் இங்குலிகம் சொரிவனஒத்தவே...என்பது

இதற்கு உரை தந்த நச்சினார்க்கினியர் பவளமேயனைய வாகிய மயிரையுடைய வெருகின் பெரியனவாகியபேரெலி அஞ்சனவரையிலிருந்து அகழும் சாதிலிங்கம் தாழ்வரையில் தலையிலே வீழ்கின்றவை யானையின் நுதலிலே தவழும்பட்டுக்கச்சைஒத்ததென்க என்றார்.

யாப்பிலக்கணத்துள் நால்வகை வழுக்களில் பொருள் வழுவுக்குக் காட்டாகத் தந்த ஒரு பழஞ்செய்யுள் சிந்தாமணி ஆசிரியர் அமைத்த செய்யுள்போல் உண்டு. அதாவது:

வாளை மேய்ந்தவளை கோட்டுக் குதிரை
கோழிலை வாழைக் கொழுமடல் உறங்கும்
ஊரன் செய்த கேண்மை
தேரை வாலினும் பெரி தாகின்றே.

இதன் அன்வயம்:—

வாளை (மீன்) கொழுமடலில் உறங்கும்
தேரை வாழைக் கோழிலையில் உறங்கும் (கொழுமை-கோழ்)
ஊரன் செய்த கேண்மை வளைகோட்டில் மேய்ந்த
குதிரை வாலினும் பெரிதாகின்றே.

சீவகசிந்தாமணி ஆசிரியர் எலிமயிர் என்றஇத்தொடரின் ஆட்சியைக் கீழ்க் கண்ட செய்யுட்களில் அமைத்துத் தம் கருத்தை ஒளித்து வைத்துளார். புதைப் பொருளென எடுத்து விளக்குதல் அரிது.

819 நுதிமயிர்த் துகிற்குப்பாயம்
1874 மயிர் எலியின் போர்வையொடு
1898 பேரெலி மயிர்க் கச்சு
2425 உருவம் ஆர்ந்தன உரோமப்பட்டுடுத்தி
2467 தெய்வம் மலர் உரோமப்பூம் பட்டுடுத்து
2680 கண் கொளாதன எலிமயிர்ப் போர்வை
2471 எங்கும் இல்லன எலிமயிர்த்தொழில் போர்வை
2686 செற்கெருப்புனும் செவ்வெலிம் மயிர்க்கம்பலம்



பண்ணினார்கள். பிறகு அவ்விரண்டு...ஸர்ப்பங்களும் ருத்ருடைய மகிமையினாலே...வில்லும் அம்புமாயின...அவ்விருவரும்...இரண்டையும்...பரமசிவனிடத்தில் கொடுத்தார்கள்...சங்கரர்...அந்தப் பாசுபதாஸ்திரத்தையும் பிரதிஜ்ஞையினுடைய நிறைவேறுதலையும் வரனாகவளித்தார்...அர்ஜுனன்ஈச்வரரிடத்திலிருந்து...பாசுபதாஸ்திரத்தைப் பெற்று...தன் காரியம் நிறைவேறினதென்றே எண்ணினான்...அர்ஜுனனும் ஹ்ருஷீகேசரும் ஸந்தோஷமடைந்து அந்த மஹேசுவரரை முடிகளாலே பல முறை வணங்கினார்கள்...அர்ஜுனனும் கேசவரும் ருத்ரரால் அனுமதி கொடுக்கப்பட்டு மிகுந்த ஸந்தோஷத்தோடு தம்...மிடத்தை வந்தடைந்தார்கள்".

இனி அக்கதை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:-

1. ஆ:— கயிலாச யாத்ரா சமயத்தில் அர்ச்சுனன் சிவபூசை செய்யவேண்டுமென்று கிருஷ்ணரிடம் சொன்னான். கிருஷ்ணர் அவனைப்பார்த்து, 'என்பாதங்களில் நீ பூசை செய். அப்பூசையைக் கயிலையிற் சிவன் முடியிற்காண்பாய்' என்றார். அவனும் அப்படியே செய்து கிருஷ்ணரின் காலிலிட்ட பூக்களைக்கயிலையிற் சிவன் முடியிலிருக்கக் கண்டான். அதற்குப் பிரமாணம் 'பார்த்தோப நீதம் மத்வாஸுதேவஸ்ய பாதாரவிந்தார்ச்சித சித்ரபுஷ்பம்—ததர்ச கங்காதர மௌளிமத்யே பபூவ வீர: க்ருத நிச்சிதார்த்த:' என்ற பாரதம். 'தீர்த்தனுலகளந்த சேவடி மேற் பூந்தாமஞ்—சேர்த்தி யவையே சிவன் முடிமேற் றான்கண்டு—பார்த்தன் றெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை—பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே' என்றார் நம்மாழ்வாரும். சிவனைப் பரம்பொருளென வெண்ணியிருந்த அர்ச்சுனனுக்கு அம்மயக்கத்தைத் தெளிவித்தற்கே அவனோடு கிருஷ்ணருங் கயிலை சென்றார்.

ச:— 'பார்த்தன் மாதவரை அலங்காரஞ் செய்து பலியைத் திரியம்பகருக்காக நிவேதனஞ் செய்தான்' என்பது மூலம். மாதவரை—மாதவராகிய விக்கிரகத்தில் திரியம்பகருக்காக—திரியம்பகரை ஆவாகித்தது பார்த்தனுக்குக் கிருஷ்ணர் விக்கிரகமும் சிவபிரான் அதிலாவாகிக்கப்பட்ட வழிபடு கடவுளுமாயினரென்பதே அதனாற் கொள்ளக் கிடக்கிறது. 'வாஸுதேவருக்கு நிவேதனம் செய்யப்பட்ட பலியை முக்கண்ணருகில் கண்டான்' என்பது அம் மூலத்துள்ள மற்றொரு வாக்கியம். வாஸுதேவருக்கு—வாஸுதேவராகிய விக்கிரகத்தின்முன் அர்ச்சுனன் கிருஷ்ணரின்பாதத்திலிட்ட பூக்களைச் சிவபிரானின் முடியிற் கண்டானென்பதற்கு அம் மூலத்தில் வசனமில்லை. அதனாற் 'பார்த்தோப நீதம்' என்ற வாக்கியம் படைக்கப்பட்டதாகும். சமீப காலத்தில் வைஷ்ணவ பூமான்களால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட தமிழ் வியாஸ பாரத வசனத்திற்றானும் அவ்வாக்கியப் பெயர்ப்புச் சூனியம். ஆக,

அந்நம்மாழ்வார் பாட்டும் மூலவசனத்தோடுமுரணி மதிப்புக் குறையலாயிற்றென்க. ஆனால் வில்லிபுத்தூரார் அப்பாட்டிலுள்ள அடி, முடியென்ற தார்ப்பிரயோகங்களைத் தள்ளி மேல் என்ற சத்பிரயோகத்தையமைத்துக் 'கண்ணன் மேலணி மலரனைத்துங் காயெரி-வண்ணன் மேற் காண்டலு மகிழ்ந்து மேதினி—யுண்டு மாதவன் சிவனுருவ மென்றுணர்ந்—தண்ணலு முடல் புளகரும் பினனரோ' வெனு மூலவசனத்தை யனுசரித்துப் பாடிக் கௌரவமெய்தினர். 'செங்க ணெடியான் மேற் றேர்விசய னேற்றியபூப் பைங்கண் வெள் ளேற்றான் பாற் கண்டற்று—லெங்கு, முடிமன்னர் சூடியபூ மொய்ம் மலர்த்தார் மாற, வடிமிசையே காணப் படும்' என்ற முத்தொள்ளாயிரச் செய்யுளையும் நோக்குக. யுதிஷ்டிராராகிய மரத்துக்குக் 'கிருஷ்ணனும் வேதமும் பிராமணர்களும் வேர்கள்' என்பது ஆதி 1-வது அத்தியாயம். கிருஷ்ணரும் உத்யோகம் 29-வது அத்தியாயத்தில் 'யுதிஷ்டிரானவர் தர்ம ரூபமான பெரிய மரம்...நானும் வேதமும் பிராமணர்களும் (அதன்) வேர்' என்றார். அவ்வாக்கியத்திற்கு வடமொழிமூலம் 'மூலம் க்ருஷ்ணோ ப்ரஹ்ம ச ப்ராஹ்மணாச்ச' என்பது. இதிலுள்ள 'ப்ரஹ்மம்' என்ற பதமே வேதமெனப் பெயர்க்கப்பட்டது. அப்பெயர்ப்புத் தப்பு. கிருஷ்ணரையும் பிராமணர்களையும் சல்லி வேர்கள் போற் பக்கங்களிலும் பிரமத்தை ஆணிவேர் போல் நடுவிலும் வைத்தனது அப்பர்வம். கிருஷ்ணரும் பிராமணருஞ் சேதனர்கள். பக்கவேர்கள் சேதனரானால் ஆணிவேராகிய பிரமம் அவரினுஞ் சிறந்த சேதனமாகவன்றோ இருக்கவேண்டும்? அப்படியிருக்க அப்பிரமத்தை வேதமென அசேதன வஸ்துவாக மொழிபெயர்க்கலாமா? பாண்டவர் துரியோதனனிடமிருந்து ராஜ்யத்தைப் பெறுதற்கு மட்டும் கிருஷ்ணர் அவர்கள் சார்பாய் நின்றார். பிராமணர்கள் பாண்டவர்களுக்கு ஆசி கூறிக்கொண்டே அவர்கள் சென்றவிடமெல்லாஞ் சென்றார்கள். அவ்விருவர் சகாயங்களும் அவ்வளவே. ஆனால் ஐந்து இந்திரர்கள் பாண்டவராய்ப் பிறந்தது, லக்ஷ்மி திரௌபதியாய்ப் பிறந்தது, அவர்கள் அவளை மணந்தது, கிருஷ்ணர் அவர்களுக்குச் சகாயரானது, பார்த்தனுக்குக் காண்டீவம் பாசுபதாஸ்திரம் முதலியன கிடைத்தது, திரௌபதி துகிலுரியப்பட்டது, யுத்தத்தில் அவர்களெல்லாம் அடி உதை மோகம் மூர்ச்சை க்லேசம் ரோதனம் பயம் முதலியன அடைந்தது, முடிவில் அவர்கட்கு ஜயம் லாபம் மரணம் அநந்தரகதி கிடைத்தது ஆகியவெல்லாம் அப்பாண்டவர் விதியிருந்தவாறு அவர்கட்கு உறுத்தி வைத்தவர் சிவபிரானே. பாரதம் ஆத்யந்தம் அவ்வுண்மை பிரசித்தம். அக் காரணத்தால் அப்பிரமபதத்தாற் சுட்டப்பட்ட பரம்பொருள் சர்வஜ்ஞராகிய சங்கரரே யாவர். ஆகவே அர்ச்சுனன் சிவபரத்துவத்தை யயர்த்துச் சிறிதும் சிவியானென்க. கிருஷ்ணரும் அன்னரே.



2. ஆ:— அடியிலிட்டதை முடியிற் கண்டானென்பதை விலக்கிக் 'கண்ணன் மேலணிமலரனைத்துங் காயெரி வண்ணன் மேற் காண்டலும்' என்பதைக் கொண்டாலும், 'அரியுஞ் சிவனு மொன்று' என்ற உலக வழக்குத்தானே போதரும்? அதனைவிட்டுக் கிருஷ்ணரை விக்கிரக மென்றும் சிவனை அதிலாவாகிக்கப்பட்ட தெய்வமென்றும் என் சொல்லவேண்டும்?

ச:—வில்லியார் அச்செய்யுளிற்றானே 'மாதவன் சிவனுருவம்' என்று சொல்லி விட்டார். உருவம்—திருமேனி. ஆகலின் அவ்வாக்ஷேபம் நிரஸ்தம். மேலும், மேற்காட்டப்பட்ட வனபர்வ மூலத்தில் அர்ஜுனன் 'மண்ணாலான மேடையைச் செய்து கொண்டு அந்தச் சிவபிரானை மலர் மாலையால் பூஜித்தான். அப்பொழுது...அர்ஜுனன், அந்த மாலையை வேடனுடைய தலையில் இருக்கக் கண்டான்' என்றிருக்கிறது. மேடையாவது சிவலிங்கம். அதனால் அம்மேடையுஞ் சிவபிரானும் ஒன்றெனச்சொல்லி விடலாமா? அவன் கிருஷ்ணரிடத்திற் சிவபிரானைப் பூசித்தானென்பதற்குத் தாற்பரியமாகவே அது மிளிர்கிறது. ஆகவே, மேடையும் கிருஷ்ணரும் விக்கிரகஸ்தானத்தில் ஒன்றே யென்பதும், மேடையிற் போலக் கிருஷ்ணரிலும் ஆவாகிக்கப்பட்ட பரமாத்மா சிவபிரானென்பதுமே தீர்மானம்.

3. ஆ:—கிருஷ்ணர் கைலைக்கு வந்ததும் சிவன் எழுந்து ஓடோடியும் வந்து அவரைவணங்கி எதிர்கொண்டழைத்து ஆசனத்திருத்தி அருகில் நின்று உபசரித்தான். அத்தகைய சிவனையா கிருஷ்ணர் வணங்குவர்?

ச:— 'பிறகு அந்த வார்த்தையைக் கேட்டு மிகுந்த புத்திசாலிகளும் மஹாத்மாக்களும் குற்றமற்றவர்களுமான வாஸுதேவர் அர்ஜுனனிருவரும் அபிமுகமாக எழுந்திருந்து கைகளைக்குவித்துக் கொண்டு பக்தியோடு திவ்யமான ஸ்தோத்திரத்தினால் பின்வருமாறு துதித்தார்கள்' என்றது துரோணம் 80-வது அத்தியாயம். அத்தோத்திரத்தையும் ஆண்டே காண்க. 'அர்ஜுனனும் ஹிருஷீகேசரும் ஸந்தோஷமடைந்து அந்த மஹேச்வரரை முடிகளாலே பல முறை வணங்கினார்கள்' என்பது அதன் 81-வது அத்தியாயம். சிவபிரான் கயிலையில் கிருஷ்ணரை அதிகார தோரணையிற்கூட உட்காரச் சொல்லவில்லை. அக்கேசவர் நின்ற வண்ணமே காரிய சாதகஞ் செய்துகொண்டு திரும்பினர்.

4. ஆ:—சிவன் செய்த மோகன சாத்திரப்படி. அவனையுங் கடவுளாக எண்ணிச் சிலர் வணங்கட்டுமென்ற திருவுள மேலீட்டால் கிருஷ்ணர் அவனை அங்கும் மற்றவிடங்களிலும் வணங்கிக் காட்டினர். ஆகலின் அவ்வணக்கம் நாடகமேயாமென்க.

ச:— 'வாஸுதேவர்...யுதிஷ்டிரரிடம் சென்று....அவருடைய பாதங்களில் வந்தனஞ் செய்து' என்றது ஆதி 206-வது அத்தியாயம். 'கண்ணபிரான்....குந்தியின் பாதங்களைத் தலையால் வணங்கினார்', 'கிருஷ்ண பகவான்....யுதிஷ்டிரரிடம் விடைபெற்று,...... அவருக்கு அபிவாதனத்தோடு பாதங்களைத் தொட்டு வந்தனஞ் செய்தார்' என்றது ஸபா 2-ம் அத்தியாயம். 'பலராமரும் கிருஷ்ணனும்......இந்திரனுக்கு நமஸ்காரஞ் செய்தனர்' என்றது அதன் 55-வது அத்தியாயம். 'வாஸுதேவர்......ஸாந்தீபனியின் பாதங்களை...பிடித்து வந்தனஞ் செய்தார்' என்றது அதன் 58-வது அத்தியாயம். 'வாஸுதேவர்....தர்மபுத்திரரை நமஸ்கரித்து' என்றது வனம் 12-வது அத்தியாயம். 'கோவிந்தர்......யுதிஷ்டிரரை நமஸ்கரித்து' என்றது அதன் 22-வது அத்தியாயம். 'கிருஷ்ண பகவான் ...தர்ம ராஜரையும்...பீமனையும்...வந்தனம் பண்ணினார்' என்றது அதன் 185-வது அத்தியாயம். 'ஜநார்த்தனரானவர், விருஷபத்தைப் பின் பக்கத்தில் தொட்டுப் பிராம்மணர்களை நமஸ்கரித்து அக்கினியைப்பிரதக்ஷிணம் செய்து...', 'அச்சுதர் தேவர்களுக்கு நமஸ்காரம் செய்து' என்றது உத்யோகம் 82-வது அத்யாயம். 'ஜநார்த்தனர்... எல்லா முனிவர்களையும் வணங்கிப் பூஜித்து' என்றது அதன் 83-வது அத்தியாயம். 'பகவானும்...விதிப்படி சுத்தியைச் செய்து கொண்டு...ஸந்தியாவந்தனம் செய்தார்' என்றது அதன் 84-வது அத்தியாயம். பகவான் என்றது கிருஷ்ணரை. 'ஸ்ரீ வாஸுதேவர் அவளுடைய கிரகத்தில் புகுந்து, பாதங்களில் வணங்கி' என்றது அதன் 132-வது அத்தியாயம். அவள் என்றது குந்தியை. 'வாஸுதேவர் முதலான எல்லாரும் அவரை வணங்கினார்கள்' என்றது அதன் 157-வது அத்தியாயம். அவரென்றது பலராமரை. 'ஹலாயுதர், முதியவர்களான விராடனையும் துருபதனையும் வணங்கிவிட்டு' என்றது அவ்வத்தியாயம். 'அவ்விருவரும்......அவருடைய இரண்டு சரணங்களிலும் வந்தனம் செய்தார்கள்' என்றது கர்ணம் 68-வது அத்தியாயம். இருவரென்றது கிருஷ்ணார்ஜுனர்களை. 'அவ்விருவரும் (யுதிஷ்டிரரை) வந்தனம் செய்து கைகுவித்து நின்றனர்' என்றது அவ்வத்தியாயம். இருவரென்றது கிருஷ்ணார்ச்சுனரை. 'கேசவர், ஸ்ரீவியாஸர் திருதராஷ்டிர மகாராஜர் இவர்களின் கால்களில், வணங்கி என்றது ஸல்யம் 64-வது அத்தியாயம். 'அவ்விருவரும் திருதராஷ்டிர ராஜனிடம் சென்று.........அவனுடைய பாதங்களைத் தொட்டுவணங்கினார்கள்...அவ்விருவரும், அவ்வாறே காந்தாரி, குந்தி, தர்மபுத்திரர், பீமஸேனன் இவர்களுடைய பாதங்களையும் தொட்டு வணங்கினார்கள்' என்றது ஆச்வமேதிகம் 52-வது அத்தியாயம். இருவரென்றது கிருஷ்ணார்ச்சுனரை. 'கண்ணபிரான் .......(அவளை)ப் பிரதக்ஷிணம் செய்தார்' என்றது அவ்வத்தியாயம்.

# செய்தித்திரட்டு.

## தேவகோட்டை ஸ்ரீமாந், அழ. சுப. பழ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கல்யாண வைபவம்.

(உயர்திரு, காசிவேங்கடாசாரிய சுவாமிகள்)

ஸ்ரீமாந் சுப்பிரமணியன்செட்டியாரவர்கள்:—நாட்டுக்கோட்டைநகரத்தார் வசிக்கும் நகரங்களுக்கெல்லாம் தலைநகரமாகிய தேவகோட்டையிலே, இரத்தின தனமகுட வைசியர் மரபிலே மாற்றூர்க்கோயில் உறையூர் வகுப்பிலே, பரம்பரைக் கௌரவ குடும்பத்திலே, சிதம்பரஞ் செட்டியாரவர்களின் அருமைப் புதல்வர். கருவிற் பெருந்திருவினர். வடமொழி தென்மொழித் தேர்ச்சியுடையவர். இராஜபாஷையும் நன்கு தெரிந்தவர். சிவாகம சித்தாந்த சைவத் திருநெறிச் செல்வர் தம்நகரிலே சிவாகம சங்கம் தாபித்து, சிலமாயுள்ள புராதன ஏட்டுப் பிரதிகள் பலவற்றை வருவித்துப் பரிசோதித்து அச்சிட்டுப் புத்தகரூபமாக வெளிப்படுத்திச் சிவாலயங்களில் நித்திய நைமித்தியங்கள் விதிவழுவாது நடைபெறச் செய்யும் பெரும் புண்ணியமும் புகழும் பெற்றவர். திருப்புனவாயிற் றிருக்கோயில் ஜீரணோத்தாரணம் பண்ணி மஹா கும்பாபிஷேகம் புரிந்து நித்திய நைமித்தியங்களைச் சிவாகம முறைப்படி நடத்தி நாளுக்கு நாள் விருத்திசெய்து பரம்பரைத் தருமகர்த்தாவாயுள்ளவர். இன்னும் பலதருமங்களையும் நன்கு நடத்துபவர். யாவராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். அறிவு, பொறை, சீலம், அருள், அடக்கமாகிய சிறந்துவிளங்குபவர்.

இப்பெருந் தன்மையையுடைய இவர்களுக்கு நிகழும் தாது ஹு மார்கழி மீ ௨௮ (11—1—37) சஷ்டியப்த பூர்த்திசாந்திக் கல்யாணம் சைவசித்தாந்த சன்மார்க்கப் பெரியார்க்குரிய சிவாகமநூல் முறைப்படி கண்டவர் கண்ணும் மனமுங் களிகூரச் சிறப்பாக நடைபெற்றது. பல ஊர்களிலிருந்து வரவழைக்கப்பெற்ற ஆசார விற்பன்ன ஆதிசைவ குருமார் பலருள் கீழ்வேளூர் சிவஸ்ரீ சா. சுப்பிரமணியசிவாசாரியர் முதலிய மூவர் பிரதான ஆசாரியராகவும், மற்றொரு மூவர் சாதகாசாரியராகவும், பதின்மூவர் இருத்துவிக்குகளாகவும் இருந்து பிரதான வேதிகை ஒன்றும் வேதிகை ஸ்தண்டிலம் இரண்டும் ஆக மூன்றிலும் ஐம்பத்தைந்து கும்பங்கள் அமைத்து குண்டங்கள் மூன்றிலும் அக்கினி பகவான் வலஞ்சுழித்தெழுந்து குதூகலிக்க வளர்த்து ஓமஞ்செய்து பூசித்தார்கள். கும்பஸ்தாபன முதலியன அன்று அதிகாலையிலேயே தொடங்கப் பெற்றுப் பூர்த்தியாகிக் குறித்த சுபமுகூர்த்தத்தில் அபிஷேகம் ஆகிச் சிவாகம விதிப்படி தானங்கள் பல கொடுத்துச் சாந்திக் கல்யாணம் நன்கு நடைபெற்றது. பின்பு செட்டியாரவர்கள் மனைவி முதலாயினாரோடு சிவாலயத்துக்குச் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு வந்து இரவு ஏழுமணிக்குப் போசனம் பண்ணினார்கள் இவர்கள் பெருஞ் செல்வராயிருந்தும் அன்று பகல் முழுதும் உணவு கொள்ளாமலிருந்து பக்தி சிரத்தையுடன் சிவாகம பூர்வக சாந்திக் கிரியைகளை ஒழுங்காக நடைபெறச் செய்து கண்டு களித்தமை பாராட்டத்தக்கதே. இப்பெருங்காரியத்துக்கு இன்றியமையாத துணையாயிருந்தவர்கள் திருப்புனவாயிற் கோயிற் சிவபூஜகர் சிவஸ்ரீ மீனாக்ஷிசுந்தர சிவாசாரியரவர்கள்; தேவகோட்டை தி. அ. சு. அ. சுப்பிரமணியச் செட்டியாரவர்கள்.

இவ்வைபவத்தைக்காண அயலூர் உள்ளூர் நகரத்தார் பலரும் பந்துக்களும் சிநேகிதர்களும் அந்தணர் முதலியோரும் முன்னதாகவே வந்து குதூகலத்துடன் நிறைந்திருந்தார்கள். யாவருக்கும் உரிய காலத்தில் அமுதருத்தி அன்புடன் உபசரிக்கப்பெற்றது. பந்துக்களுக்கும், நகரத்தார்களுக்கும் தமது கிருகத்திலேயே போசனம் நடைபெற்றது. ஆதிசைவ குருமார், ஜெபப் பிராமணர், உள்ளூர் வெளியூர் அந்தணர், பாகவதர், தேவார பாராயண மாகேசுரர், உத்தியோகஸ்தர், சாதுக்கள் முதலியோர்க்குப் போசன ஸ்தானங்கள் தனித் தனி யமைத்து ஆங்காங்கு இன்சொல்லும் அன்பும் அமைந்த தக்கவரைத் தலைவராக நியமனஞ் செய்து உபசரிக்கச்செய்து சாதுக்களுக்கெல்லாம் வஸ்திரங்கள் கொடுத்துப் பெறுதற்குரியார்க்கெல்லாம் பரிசளித்தமை பாராட்டப்பாலதாம். இப்பெரியார்க்கு நீடிய ஆயுளும் கூடியவாழ்க்கையும் தந்து திருவருள் சுரக்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**தவறி விழுந்து பிழைத்தான்:**— ஜனவரி 8உ பிற்பகல் மணி 4-20க்கு விழுப்புரத்திலிருந்து விருத்தாசலம் சென்ற புகைவண்டியிலிருந்து மரகதபுரம் இராமசாமி ஐயர் குமாரன் பத்து வயதுள்ள நடராஜன் வெளியே பார்த்துக் கொண்டிருந்த நிலைமையில் திடீரென்று தவறிக்கீழே விழுந்துவிட்டான். பலத்த காயம். கண்டமாணடி நிலையத்திற் சேர்ந்த வண்டியைப் பின்பக்கமாக நடத்தி அவனை எடுத்து வந்து விழுப்புரம் வைத்திய நிலையத்திற் சேர்த்து சிகிச்சை செய்து வருகின்றனர். உயிருக்குத் தீங்கில்லை.

**தஞ்சாவூர்:**— முனிசிபாலிடிக்குச் சொந்தமான இடத்தில் ஏற்றியிருந்த தேசியக் கொடி இறக்கப்பட்டது. பல வீடுகளிலும், மோட்டார் வண்டிகளிலும் கொடிகள் கட்டிப்பறக்கின்றன.

**திருவாங்கூர்:**- பெரியராணியாரின் பரிபாலனத்திலுள்ள திருக்கோயில்களுள் தீண்டாப்பேர்கள் நுழையக்கூடாது. வரம்புமீறிய அரசர் ஆட்சியிலும் வரம்பைக் காக்கும் இராணியார்செயல் மங்கையர்க்கரசியாரை நினைப்பூட்டுவதாயிருக்கிறது.

**மைசூர்:**— இச்சமஸ்தானத்திலுள்ள திருக்கோயில்களுள் வரம்பு மீறியாரும் நுழையக்கூடாது. திருவாங்கூரில் தீண்டாதார் நுழையும் கோயில்களின் பூஜகர் நுழைந்தாலும் தீட்டு என்பதாக அவர்கள் நுழைவும் தடுக்கப்படுகிறது.

**தைப்பூசத் திருவிழா:**— குன்றக்குடி, திருவாவினன்குடி, திருவிடைமருதூர், ஆகிய திருத்தலங்களிலும் பர்மாவில் ரெங்கோன்டாசியன், முதலான ஊர்களிலும் மலாயாவில் பிநாங்கு முதலானவூர்களிலும் வழக்கம்போல்சிறப்பாக நடைபெற்றது.

**நாட் குறிப்புகள் (காலண்டர்கள்) வரவு:**— சென்னை, 62, சுவாமி பிள்ளைத் தெருவிலுள்ள அச்செழுத்துவார்ப்பு ஆகிய தொழிற்சாலை நெல்சன் கம்பெனியாரும், சென்னை சூளை 1/16 பேக்கர் திருவேங்கட முதலித்தெருவிலுள்ள ஸ்பார்ட்டன் டைப் வார்ப்படசாலை நார்ட்டன் அண்டு கம்பேனியாரும், சென்னை திருவல்லிக்கேணி ஹைரோடிலுள்ள வர்ணப்பதிப்பு ஆகிய அச்சுத்தொழில்சாலை சோல்டன் கம்பெனியாரும், சென்னை மயிலாப்பூர் தென்னிந்தியரசாயனசாலை கேசவர்த்தனி நிலையத்தாரும், கல்கத்தா 7வது கவுன்சில் ஹவுஸ் தெருவிலுள்ள நாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியாரும் 1937ம் வருடத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் தேதி கிழமைகளைக் காட்டக்கூடிய அட்டவணை பன்னிருமாதங்கட்குப் பன்னிரு தாள்கள் சேர்த்துக்கோத்துத் தந்துள்ளார்கள்.

---


பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.